விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள் : இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 08 வெள்ளிக்கிழமை (23.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 340

ராம்கோ
MADRAS CEMENTS LTD.
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இலங்கை அரசு மீது கனடா அதிருப்தி!

(ரொரன்ரோ)



இலங்கையில் இடம்பெற்றுள்ள மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்றத்தை பொறுப்பேற்க மறுப்பது மற்றும் இது குறித்து ஐ.நா. உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமை போன்றவை குறித்து கனடாவில் ஆளும் கன்சவேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கொர்நேலிச்சு அதிருப்தி வெளியிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## நீரில் மூழ்கி குழந்தை பலி

(மிருசுவில்)

பள்ளத்தினுள் தவறிவிழுந்த குழந்தையொன்று மூச்சுத்திணறி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் நேற்று மாலை 3 மணியளவில் வடக்கு மிருசுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த ஜெசுதன் மதுரன் (வயது-2) என்ற குழந்தையே பலியானதாகும். (20ஆம் பககம் பார்க்க)

## குடும்பஸ்தர் இருவர் குளத்தில் மூழ்கிப் பலி

(முல்லைத்தீவு)

குளத்தினுள் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் இருவர் மூச்சுத் திணறி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் 2 மணியளவில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச உடையார்கட்டு பகுதியில் அமைந்துள்ள இடைக்கட்டுக்குளத்தடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் உடையார்கட்டு தெற்கு குரவில் பகுதியைச் (20ஆம் பக்கம் பார்க்க)

## அஸ்வர் எம்.பியின் நடவடிக்கைகள் கேவலமாக இருக்கின்றது - பிரபா எம்.பி

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் தமது கருத்துக்களை கூறுவதற்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிமை உள்ளது. இதனை தடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை. குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமது கருத்துக்களை கூறும் பொழுது சிறுபான்மை மக்களின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் அஸ்வர் எம்.பியின் நடவடிக்கைகளை பார்க்கும் பொழுது கேவலமாக இருக்கின்றது என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது, நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சரவணபவன் எம்.பி. தனது கருத்துக்களை முன்வைத்தார்.

இவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அபிவிருத்தி சம்பந்தமாக சந்தேகத்தைக் கிளப்பினார். யுத்தம் நடைபெற்ற காலம் தொட்டு இன்று (20ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை சூத்திரதாரிகளை மத்திய அரசு விட்டு வைத்துள்ளது!

### சீமான் கண்டனம்



(டில்லி)


ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சதித்திட்டம் தீட்டியவர்களாக இருக்கலாம் என்று நீதிபதி ஜெயின் ஆணையத்தால் சுட்டிக்காட்டப்பட்ட சந்திராசாமி, சுப்பிரமணியசாமி போன்றோரை விசாரிக்க மத்திய காங்கிரஸ் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

மும்பை தாக்குதல் தீவிரவாதிகளில் ஒருவரான அஜ்மல் கசாப் தூக்கிலிடப்பட்டு விட்டதால் மும்பை தாக்குதல் வழக்கு முடிந்து விட்டதாக மத்திய உள்துறை மந்திரி சுசில் குமார் சிண்டே கூறி இருப்பது வியப்பாக உள்ளது.

தாக்குதலுக்கான சதித்திட்டத்தை தீட்டியவர்கள் பாகிஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்களால் தமிழர்களுக்கான தீர்வு நிச்சயம் கிடைக்கும்

### நம்பிக்கை வையுங்கள் என்கிறார் சிறிதரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசின் மீது அழுத்தங்களையும் நிர்ப்பந்தங்களையும் சர்வதேசம் பிரயோகித்து வருகிறது. இதனால் தமிழர்கள் தமக்கான தீர்வைப் பெறுவது வெகு தொலைவில் இல்லை என்பதை பல்வேறு சம்பவங்கள் உணர்த்தி வருகின்றன. இலங்கை அரசு மிகவும் கபடத்தனமாக, சூழ்ச்சி கரமாக தமிழர்களை கூறுபடுத்தி சிதைக்கும் நாசகாரத்திட்டங்களை எமது மண்ணில் அரகேற்றி வருகிறது.

இச் செயல்திட்டங்கள் மூலம் உலக சமூகத்தின் பார்வையிலிருந்து அது தப்பிப் பிழைக்க முயற்சிக்கிறதுஎனத் ததேகூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கை அரசு இருப்புகளுக்காக கலாசார பண்புகளை குறிப்பாக பெண்களுடைய தனித்துவப் பண்பாட்டை சிதைக்கும் முயற்சிகளில் அரச படைகளின் பங்களிப்போடு அரசு ஈடுபட்டு வருகின்றது. எமது மக்களிடையேயுள்ள அறியாமை, வறுமை, பயந்த சூழ்நிலை மற்றும் இராணுவ (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கி தலைவர் ராஜினாமா

(கொழும்பு)

இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்ரமசிங்க தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இந்த இராஜினமாவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இவரது ராஜினாமாவிற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், காமினி விக்ரமசிங்கவே இந்த ஆண்டு முழுவதிலும் தலைவராக பதவி வகிப்பார் எனக் குறிப்பிடப்படுகிறது. ஜனாதிபதி மகிந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்படவேண்டும்

### அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

13-ம் திருத்தச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13-ம் திருத்தச் சட்டத்தின் ஊடாக பிளவடைந்திருந்த அரசியல் கட்டமைப்புக்களை ஒன்றிணைக்க முடிந்தது. 13-ம் திருத்தச் சட்டத்தின் சில குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

இந்தச் திருத்தச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்தால் குழப்ப நிலை ஏற்படும். நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

13-ம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வதானால் இனங் (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசர் ஷிராணிக்கு எதிரான விசாரணைகளை தாமதப்படுத்துங்கள்

### உயர் நீதிமன்றம் ஆலோசனை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான விசாரணைகளை தாமதப்படுத்துமாறு உயர் நீதிமன்றம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகளை ரத்துச் செய்யுமாறு உயர் நீதிமன்றில் மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பான விசாரண்ணகள் நேற்று மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த விசாரணைகள் முடிபடையும் வரையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகளை தாமதப்படுத்துமாறு உயர் நீதிமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாவடுதுறை ஆதின

# சிவப்பிரகாச சுவாமிகள் சமாதி நிலை அடைந்தார்



இந்தியாவின் நாகை மாவட்டம் மயிலாடு துறை அருகேயுள்ள திருவாவடுதுறை ஆதினத்தின் 23-வது பட்ட குருமகா சந்நிதான மாக இருந்த சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் நேற்று அதிகாலை 2 மணியள வில் சமாதி நிலையை அடைந்தார்.

உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்கு அண்மையில் இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. பின்னர் மேல் சிகிச் சைக்காக கும்பகோணத்தில் உள்ள மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனு மதிக்கப்பட்டார்.

பின்னர் ஆதினம் திரும்பிய அவருக்கு நேற்று முன்தினம் இரவு மீண்டும் உடல் நலக்குறைவு அதிகரிக்கவே வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

எனினும் செல்லும் வழியில், அவர் சமாதி நிலையை அடைந்தார்.

தமிழ் வளர்த்த சைவ மடங்களில் முதன்மையாக திகழ்வது திருவாவடுதுறை ஆதினம். சுமார் 600 வருடங்களுக்கு முன்னர் தோன்றிய சைவ மடம் நெடிய பாரம் பரியமும் சிறப்பும் கொண்ட திருவாவடுதுறை ஆதின மடத்தின் 23-வது பட்டத்தை அலங் கரித்தவர் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்பது குறிப்பி டத்தக்கது. (ந-11)

## திருமண மண்டப திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோவிற்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கோவிற்கடவை திருமண மண்டப திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் பொ. மயில்வாகனம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலா ளர் சி. சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் ச. சிவஸ்ரீ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்விற்கு ஆசியுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள் ஆற்றவுள்ளார். (ந-9)

## தமிழக மீனவர்கள் மீது இலங்கை படையினர் தாக்குதல்

கச்சைதீவு அருகே மீன்பிடியில் ஈடுபட்டி ருந்த இராமேஸ்வரம் மீனவர்களின் மீது இலங்கை கடற்படையினர் சரமாரியாக தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து நேற்றுமுன் தினம் 662 விசைப் படகுகளில் சுமார் 2800-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கச்சத்தீவு அருகே உள்ள கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது 5 சிறிய கப்பல்களில் அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர்.

பிளாஸ்ரிக் குழாய்களைக் கொண்டு மீன வர்களை தாக்கியதாகவும் மீன்பிடி சாதனங் களை சேதப்படுத்தியதாகவும் மேலும் மீனவர் கள் பிடித்து வைத்திருந்த மீன்களை மீண்டும் கடலில் வீசி எறிந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலும் 20 மீனவர்களின் படகுகளில் ஏறி மீன்பிடி சாதனங்கள் மற்றும் வீசப்பட்டு இருந்த வலைகளை அறுத்து எடுத்து கடலில் வீசினர்.

இதனால் உயிரோடு திரும்பினால் போதும் என தாங்கள் கரைக்கு திரும்பிவிட்டோம் எனவும் மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுத்து இராமேஸ்வரம் மீனவர் களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கூறியுள்ளனர். (ந - 11)

## செய்மதிக்கும் அரசுக்கும் தொடர்பில்லை - அனுஷ

சீனாவில் சீசாங் செயற்கைக்கோள் ஏவு தளத்திலிருந்து நேற்று ஏவப்படவிருந்த செய்மதிக்கும் அரசுக்கும் தொடர்பில்லை என்று இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் அனுஷ பல்பிட்ட தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது, இச்செய்மதியை விண்வெளிக்கு ஏவுவதில் அரசாங்கம் எவ்விதத்திலும் தொடர்பு படவில்லை. இந்த முயற்சி ஒரு தனியார் நிறுவனம் முன்னெடுத்ததாகும். இதில் நாம் சம்பந்தப்படவில்லை. ஆனால் இந்த கம்பனி இலங்கையிலுள்ள நிறுவனங்களுக்கு செய்மதி சேவைகளை வழங்க அனுமதி கேட்டு தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவுக்கு விண்ணப்பித்துள்ளது. நாம் இன்னும் இதற்கு அனுமதி வழங்கவில்லை.

தொலைத்தொடர்பு செய்மதிகளிலிருந்து தகவல்களை பெற்றுக்கொடுக்கும் இரண்டு நிலையங்கள் இலங்கையில் உள்ளன. ஆனால் இவற்றை பயன்படுத்துவதற்கான அனுமதி இந்த செய்மதி தொடர்பில் பெறப்பட வில்லை என்றார்.

இதேவேளை இது தொடர்பில் விஞ்ஞான விவகார சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிக்கையில்.

அங்கீகரிக்கப்பட்டதும் ஜனாதிபதி ராஜபக் ஷவின் கடைசி மகன் ரோஹிதவினால் ஆதரவளிக்கப்பட்டதுமான திட்டத்துக்கு அமைய தொலை தொடர்பாடல் செய்மதி ஒன்று விண்வெளிக்கு ஏவப்படவுள்ள போதும் இந்த விடயத்தில் அரசாங்கம் தனது ஈடுபாட்டை விலக்கிக்கொண்டுள்ளது என்றார். (ந-11)


ஆசிரியர் முத்துலிங்கத்தின்

EASY ENGLISH

விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம்



- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

24

Nov 2012-Apr 2013

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.11.2012


## வான் - மோ. சைக்கிள் விபத்து தாயும் குழந்தையும் காயம்



(யாழ்ப்பாணம்)

வானும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் தாய் ஒருவரும் அவரது குழந்தையும் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினர். இந்த விபத்து சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியள வில் நாவலர் வீதியில் இடம் பெற்றுள்ளது.

நாவலர் வீதியும் கஸ்தூரியார் வீதியும் சந்திக்கும் சந்திக்கு அருகாமையில் வீதி ஓரமாக நிறுத்தப்படிருந்த வானின் கதவினை சாரதி திடீரென திறந்த போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அக்கதவினுள் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த கணவனும் மனைவியும் அவர்களது கைக்குழந்தையுடன் நடு வீதியில் விழுந்து கிடந்தனர்.

குறித்த விபத்தினையடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் தாயும் அவரது பிள்ளையும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-6)


செல்லா சினிமா யாழ்ப்பாணம்




விஜய், காஜல் அகர்வால் மற்றும் பலர் நடிப்பில்

10.30, 2.30, 6.30, 9.30



பணியாளர்கள் தேவை

வடமராட்சியிலுள்ள அழகுக்கலை நிறுவனம் ஒன்றில் பணி புரிவதற்கு பொதுப்பணியாளர் 01 (முழுநேரம்) பேஷியல், திரெட்டிங் தெரிந்தவர்கள் - 02 (பகுதி நேரம்) ஆகியோர் தேவை

தொடர்பு: இயக்குநர்

0779143171

(C-1591)



காணி விற்பனைக்கு

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய கிழக்கு வீதியில் பிரதான றோட்டுக்கு அண்மித்ததாய் 2 1/4 பரப்புக் காணி பிரத்தியேக 12 அடி அகல பாதையுடன் விற்பனை செய்யப்பட வுள்ளது. திரு. வி. தெய்வேந்திர ஐயர் அவர்களுடன் இக்காணி சம்பந்தமாகத் தொடர்பு கொள்ளவும்.

(1012)





ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ!

திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்

சுபமங்களகரமான நந்தன வருஷம் கார்த்திகை 8 ஆம் நாள் (23.11.2012) வெள்ளிக்கிழமை 10.30 மணி தொடக்கம் 12 மணிவரையுள்ள சுபவேளையில்

ஹபிஷன் நகை மாளிகை

என்னும் புதிய ஸ்தாபனம் ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து சபையைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தங்கள் நல்வரவை நாடும் எஸ். சபேஸ் 0777492274

கரணவாய் தெற்கு, குஞ்சர் கடை.



(1015)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### மரமும் சிகிச்சையும்

"சேர்! எங்கள் வீட்டின் கொல்லைப் புறத்தில் உள்ள ஒரு மரத்திற்கு உடல் நிலை சரியில்லை... அநேகமாக அந்த மரத்திற்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என நினைக்கிறேன். நீங்கள் வந்து பார்வையிட்டால் நலமாக இருக்கும்" என்றார்.

இப்படியாக யாராவது உங்களிடம் வந்து கூறினால் என்ன சொல்வீர்கள்?

சொல்வதை ஒரு மாதிரியாக நோக்குவீர்கள் தானே!

ஆனால், ஜப்பான் நாட்டில் யாராவது இப்படியாகச் சொன்னால், ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனென்றால் அங்கே மரங்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் வைத்தியர் ஒருவர் இருக்கிறார். அவரது வயது 90 ஆகும்.

அவரை "மர வைத்தியர்" என்றே அழைப்பார்கள். இனிமேல் இந்த மரம் உயிர் பிழைக்காது. பட்டுப் போய்விடும் என்ற நிலையில் இருப்பவைக்கு எல்லாம் உயிர் கொடுத்து விடுவார். அவை உயிர் பிழைத்துக் கொள்ளும். இதுவரைக்கும் ஆயிரம் மரங்களுக்கு மேலே காப்பாற்றியிருப்பார்.

மரங்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு அவர் சில விசேட வைத்திய முறைகளை உருவாக்கியுள்ளார்.

நாங்கள் வைத்தியரிடம் போனால், உடனே கையைப் பிடித்து– நாடி பார்த்து; என் பிரச்சினையென்று கேட்டறிந்து நோயைக் கண்டுபிடிக்கிற அதே மாதிரி, அவரும் என்ன செய்வார் தெரியுமா? ஆரம்பத்திலே உள்ளங்கையை அந்த மரத்தின் மீது வைத்து கண்டுபிடிப்பார். அவ்வளவு ஒரு அனுபவசாலி.

இவர் வைத்தியம் பார்த்த மரங்கள் இலகுவில் மடியாது என்று அந்த பெரியவர் சொன்னார்.

அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? "ஒரு மரம் தற்கொலை செய்துள்ளது என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சரியான நேரத்திலே நாம் அதை சற்று கவனித்தால் போதும்; அதன்பின் அது சொந்த பலத்திலே பிழைத்துக் கொள்ளும்" என்று கூறுகிறார்.

"இனி இந்த மரத்தின் மூலம் பலன் கிடைக்காது என்று நீங்களாக முடிவு செய்து வெட்டி விடாதீர்கள். மரங்களை வெட்டவே கூடாது" என்று கண்டிப்பாக எடுத்துரையுங்கள்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# நிரந்தர நியமனம் வழங்க விரைவில் நடவடிக்கை எடுங்கள்

## வன்னித் தொண்டராசிரியர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பகுதிப் பாடசாலைகளில் நீண்ட காலமாக எவ்வித வேதனமும் இன்றி பொறுப்புள்ள அதிகாரிகளினதும் அரசினதும் உறுதி மொழிகளை நம்பி தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றி வரும் நாம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டு வருவதாக வன்னி தொண்டராசிரியர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வன்னிப்பகுதி பாடசாலைகளில் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக எவ்வித கொடுப்பனவும் இன்றித் தொடர் சேவையாற்றி வரும் நாம் மட்டும் தான் நிரந்தர ஆசிரியர் நியமனத்தில் காரணம் எதுவும் இன்றி புறக்கணித்து ஒதுக்கப்பட்டுள்ளோம்.

நாட்டின் ஏனைய பகுதி தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியது போல கடந்த கால யுத்தங்கள் மூலமும் எல்லா வகையிலும் பாதிக்கப்பட்டுள்ள எமக்கும் நிரந்தர நியமனம் வழங்கக்கோரி பொறுப்புள்ளவர்களிடமும் அரசிடமும் பலமுறை எமது நிலைமையை விளக்கி கேட்டிருந்தோம். அச்சந்தர்ப்பங்களிலெல்லாம் பொறுப்பு வாய்ந்தவர்களால் வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. மிக விரைவில் நியமனம் வழங்கப்படும் என்று கூறியதுடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தால் வன்னித் தொண்டர் ஆசிரியர்களது விபரங்களை வன்னியில் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களுக்கு நேரில் வந்து பரீசிலித்து நிரந்தர நியமனத்திற்கான பெயர்ப்பட்டியல்களும் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் நீண்ட காலமாகியும் நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை.

நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புக்களுடன் பொறுப்புள்ளவர்களது உறுதி மொழிகளையும் நம்பி நீண்ட காலமாக சேவையாற்றி வரும் 600 இற்கு மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

எனவே, வன்னித்தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூறி வரும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பொறுப்பு வாய்ந்த உரியவர்கள் வன்னித் தொண்டர் ஆசிரியர்களாகிய எமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய நல்ல பதிலை ஒரு மாதத்திற்குள் பொறுப்புடன் தராவிடின் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன் எமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி தொடர் மறியல் போராட்டத்தையும் உண்ணாவிரதப் போராட்டத்தையும் முன்னெடுப்பதற்கு வன்னித் தொண்டர் ஆசிரியர்களாகிய நாம் முடிவெடுத்துத் தீர்மானித்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார். (அ-9)

## ஆவணங்கள் கண்டெடுப்பு

பருத்தித்துறை புலோலி மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவரூபன் (801802885 V) என்பவரது தேசிய அடையாள அட்டையும் செல்வக்குமார் திலக்ஷன் என்பவரது பிறப்பு அத்தாட்சி பத்திரமும் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (அ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 350 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-120 | 110 |
| பச்சைமிளகாய் | 200 | 340 | 300 |
| தக்காளி | 80 | 90 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 80 | 100 | 110 |
| கரட் | 80-100 | 80 | 160 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 70 | 90 | 80 |
| வாழைக்காய் | 50-60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 50-120 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 100 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 70 |
| பயற்றங்காய் | 120-130 | 200 | 160 |
| லீக்ஸ் | 80-90 | 110 | 120 |
| பீற்றூட் | 40-50 | 160 | 160 |
| கறிமிளகாய் | -- | 200 | 200 |
| முருங்கைக்காய் | 120 | 160 | -- |
| போஞ்சி | 120 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 150 | 300 | -- |
| கீரை 1 பிடி | 15-20 | 50 | 30 |
| தேசிக்காய் | 150 | 180 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 30-35 |

## இராசி பலன்

*23.11.2012*
*(கார்த்திகை 08, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு*
*தசமி பிற்பகல் 1.14 மணிவரை*
*உத்தரட்டாதி முழுவதும்*
*இராகுகாலம் 10.41-12.11 மணிவரை*
*சுபநேரம் 6.11-7.41 மணிவரை*
*சத்திய சாயி பாபா ஜயந்தி தினம்.*

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், தேக ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடிய நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** உறவினர் வருகையுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** உறவினர்களின் மனக் கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, போசன நன்மையுண்டு, பிரயாண பயமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை, வேலைச்சுமை கூடும்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், அபூர்வ சந்திப்புண்டு, எடுத்த காரியங்கள் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பயணங்களால் பலனுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**துலாம்** உடல் நலம் சீராகும், நல்ல செய்திகள் நாடி வரும் நாள், விருந்தினர் வருகையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்.

**விருச்சிகம்** சொத்துக்களால் இலாபமுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம், பிறருக்கு உதவுவதில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல்கள் உறுதுணையாக இருக்கும்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவிகள் கேட்டு வரலாம், இளைய சகோதரத்தின் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும், கௌரவமான நாள்.

**மீனம்** வாக்கு சாதுரியத்தால் வளம் காணும் நாள், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடம் முற்கோபத்தைக் குறைப்பது நல்லது, தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட ஆவணங்களை பெறுவதற்கு 400 இற்கு மேற்பட்டோர் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாதவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் நடமாடும் சேவை நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் சுமார் 400 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை பெற்றுக் கொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் வடக்கு மாகாண உதவிப்பதிவாளர் நாயகம் ஆனந்தி கலந்து கொண்டு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாதவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை வழங்கினார்.

இந்த நடமாடும் சேவையின்போது உரையாற்றிய பிரதேச செயலர் , யாழ்.மாவட்டத்தில் அதிகளவான சனத்தொகையைக் கொண்ட கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெருமளவான மக்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாதுள்ளனர். இதனால் இவர்கள் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இவைகள் இல்லாததால் இந்த மக்களுக்கு கிடைக்க வேண்டிய சில சலுகைகள் கிடைக்காமல் போயுள்ளது. இந்த நிலையில் பிரதேச செயலகம் பதிவாளர் நாயகத்தின் ஊடாக பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாதவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுத்தது.

தற்போது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்பட்ட அனைவருக்கும் அடுத்த மாத நடுப்பகுதியில் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-6)



நன்றி:- ஐலண்ட்

# தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தொழிற்பயிற்சி அதிகார சபை பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டுக்கான NVQ மட்டம் 3,4 இற்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT), வீட்டு மின்னிணைப்பு, முக அலங்காரம் ஆகிய கற்கை நெறிகளுக்கான (பகுதி நேரம்/ முழு நேர) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை சுன்னாகம், கைதடி, காரைநகர் மற்றும் யாழ்ப்பாண தொழிற்பயிற்சி நிலையங்களிலோ அல்லது www.vtcch.webs.com எனும் இணையத்தள முகவரியிலிருந்து விண்ணப்பப்படிவத்தினை தரவிறக்கம் செய்தோ அல்லது பெயர், முகவரியினை 075 0435971 இலக்கத்துக்கு SMS செய்தோ விண்ணப்பப்படிவங்களினை தபாலில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து அதிகார சபை, தொழிற்பயிற்சி நிலையம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்க வேண்டும்.

அனைத்து பயிற்சிகளும் 6 மாத காலத்தை கொண்டவை. முழுநேர பயிற்சியின் முடிவில் வேலையில் பயிற்சிக்காக அலுவலகங்களில் இணைக்கப்படுவார்கள் என சபையின் மதிப்பீட்டாளர் மு.மகிம்சன் அறிவித்துள்ளார். (அ)




## கணனிப் பயிற்சி நெறி

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் கணனிப்பயிற்சி நெறிகளுக்கென பதிவு செய்தோர்களுக்கான Ms office பயிற்சி நெறி எதிர்வரும் 28 ஆம் திகதியும் HTML மூலம் இணையத்தளம் உருவாக்குவதற்கான பயிற்சி நெறி எதிர்வரும் 29 ஆம் திகதியும் SQL மூலம் DATA BASE அமைப்பதற்கான பயிற்சி நெறி 30 ஆம் திகதியும் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகுமென கரவெட்டி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

## அழகியல் பாட செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாண கல்வி வலய அழகியல் பாட ஆசிரியர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியால் நடத்தப்படவிருந்த கூட்டம் தவிர்க்கப்பட முடியாத காரணத்தால் பிற்போடப்பபடப்பட்டுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.(அ-9)

# சாவ.வைத்தியசாலையில் நோயாளர்கள் அதிகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை அண்மையில் பெய்த மழையை அடுத்து அதிகரித்து வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

தினமும் 600 இற்கு மேற்பட்டோர் வெளி நோயாளர் பிரிவிலும் 30 இற்கு மேற்பட்டோர் விடுதிகளிலும் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த செப்டெம்பர் மாதத்தில் 696 பேர் சிகிச்சை பெற்ற வேளையில் ஒக்டோபர் மாதத்தில் ஆயிரத்து 38 பேர் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் வரை 656 பேர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச மக்கள் சிகிச்சை பெற வருவது குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# பகுதிநேர ஆங்கில கற்பித்தலுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிப்பதற்காக பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் புதிய பாடத்திட்டமாயின் ஏ அல்லது பி தர சித்தியும் பழைய பாடத்திட்டமாயின் பி அல்லது சி தரச்சித்தியும் பெற்றிருப்பதுடன் க.பொ.த உயர்தரத்திலும் சித்தி எய்தியிருக்க வேண்டும்.

இவர்களுக்கான எழுத்துப்பரீட்சையும் வாய்மொழிப்பரீட்சையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணபத்துடன் கல்வி சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் எடுத்து வருமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார். (அ-3-29)

## பரிசளிப்பு விழாவும் மாணவர் கௌரவிப்பும்

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி மாணவர்களிடையே நடத்தப்பட்ட நடப்பாண்டுக்குரிய அனைத்து சிறுவர் நிகழ்வு போட்டிகளின் பரிசளிப்பு விழாவும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வலய மட்டத்தில் முதலிடத்தை பெற்ற மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலர் பி.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-15)

# பாலஸ்தாபனம்

(மிருசுவில்)

யாழ். ஆனைப்பந்தியில் உள்ள அருள்மிகு சிவகுருநாத சுவாமிகள் ஆலயம் கட்டட இடிபாடுகளுடன் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளது. இந்நிலையில் ஆலய நிர்வாக சபையினர் கூடி பாலஸ்தான கும்பாபிசேக நிகழ்வுகளை நடத்த தீர்மானித்துள்ளனர்.

இதன் பிரகாரம் இன்று வெள்ளிக்கிழமை சிவஸ்ரீ பாலமனோன் குருக்கள் தலைமையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இக்கோயில் புனரமைப்பிற்கு உதவ விரும்புபவர்கள் ஆலய நிர்வாகத்தினருடன் நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-85)

## சத்ய சாயி பாபாவின் 87 ஆவது அவதார தினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 87 ஆவது அவதார தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை சத்ய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் இன்னிசை, நடனம், நாடகம், கவிதை, சாயி என்றும் எங்களுடனே எனும் தலைப்பிலான வீடியோ படக்காட்சி என்பனவும் நடைபெறவுள்ளதாக சத்ய சாயி சேவா நிலைய நிர்வாகக்குழு அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 87 ஆவது அவதார தின நிகழ்வுகள் திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் சாயி இசைகானம், பஜனை, அச்சமில்லை எனும் தலைப்பிலான நாடகம், உள்ளுறையும் இறை எனும் தலைப்பிலான சிறப்புப் பேச்சு ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

❖❖❖❖❖❖❖

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 87 ஆவது அவதார தின நிகழ்வுகள் கொக்குவில் கிழக்கு பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் இன்னிசை கீதங்கள், ஆன்மீக உரை, நடனம், நாடகம், பஜனை ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

❖❖❖❖❖❖❖

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 87 ஆவது பிறந்த தின விழாவும் நயினாதீவு பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா பஜனை நிலையத்தின் 15 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான மடத்தின் கல்யாண மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் கூட்டுப்பஜனை, கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளதாக பஜனை நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

## செயலமர்வு திகதி மாற்றம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஞ்ஞான பாட செயலமர்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. இச் செயலமர்வு நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்து பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவப்பட திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையின் செயலாளராக, பொருளாளராக 25 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி 2007 முதல் அமரத்துவம் அடையும்வரை தலைமைப் பதவி வகித்து சபையின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய அமரர் தம்பியப்பா சண்முகலிங்கத்தின் உருவப்படம் சபை மண்டபத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் திரைநீக்கம் செய்யப்படவுள்ளதாக சைவ பரிபாலனசபைத் தலைவர் அறிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதியை நீக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இருக்கிறது

## அமைச்சர் விமல் பெருமிதம்

(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வந்து அவரைப் பதவி விலக்குவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இருப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடமைபுரியும் 68 ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அத்துடன் நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை என்பவற்றை விட நாடாளுமன்றமே கூடுதல் அதிகாரத்தைக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீதிக்கு நாம் என்றென்றும் தலை சாய்த்து உயர் கௌரவம் வழங்க வேண்டும். ஆனால் இந்த நாட்டில் இன்று நீதித்துறை சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் ஆகியவை தொடர்பில் விமர்சனங்களும் விவாதங்களும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தநாட்டில் வாழும் மக்கள் ஜனாதிபதிக்கு ஆட்சி அதிகாரம் வழங்கினாலும் ஜனாதிபதியைக் கூட விலக்குவதற்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து ஜனாதிபதியை வீட்டிற்கு அனுப்புவதற்கும் நாடாளுமன்ற பிரதிநிதிகளினால் முடியும். அதே போன்று தான் இலங்கை அரசியலமைப்பு மற்றும் சட்டம் அந்த அமைச்சுக்களுக்கான நீதிமன்ற நிர்வாகத்திற்கான நிதி என்பன நாடாளுமன்றம் ஊடாக ஒதுக்கப்படுகின்றது.

பிரதம நீதியரசரை ஜனாதிபதி நியமித்தாலும் அவரை நீக்குவதற்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கும் நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களுக்கு உரிமை உள்ளது. ஆகவே இந்த நாட்டில் மிகக்கூடிய பலம் நாடாளுமன்றத்திற்கே உள்ளது என்றும் கூறினார். (அ-2)


YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com


# கர்நாடக மாநிலத்தில் கூட்டமைப்பு எம்.பிக்கள்

கர்நாடக மாநிலத்திற்கு அண்மையில் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் அம்மாநிலத்தின் வீட்டு வசதிகள் துறை அமைச்சர் சோமண்ணா மற்றும் பெங்களூர் மாநகர பிரதி மேயர் பி.எஸ்.புட்டராஜு ஆகியோரை சந்தித் துள்ளனர்.

இச்சந்திப்பின்போது இலங்கையில் வடகிழக்கு பகுதிகளில் வாழும் தமிழர்களின் இன்றைய வாழ்வாதார நிலைமைகள், கடந்த காலத்தில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், படுகொலைகள், கடத்தப்பட்டோர் மற்றும் காணாமற்போனோர், சிறை வைக்கப்பட்டோர் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் கர்நாடக மாநிலத்தின் மேற்படி முக்கிய பிரமுகர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளனர்.

இன்னல்படுகின்ற இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும் அவர்களுக்கான தீர்வுகளை பெறுவதற்குரிய வழிவகைகளுக்கு உதவவும் துணை நிற்குமாறு அமைச்சர் சோமண்ணாவிடமும் பிரதி மேஜர் புட்டராஜுவிடமும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்கள் சார்பாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கு பதிலளித்த கர்நாடக முக்கியஸ்தர்கள் இந்த விடயத்தில் மிகுந்த அக்கறையுடன் இருப்பதாக தெரிவித்துள்ளனர். (அ-2)

## மாந்தை கிழக்கில் மருத்துவ முகாம்

(முல்லைத்தீவு)

இலவச மருத்துவ முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இலவச மருத்துவமும் இலவச வைத்திய ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது.

எனவே 15 கிராமசேவகர் பிரிவில் உள்ள மக்களையும் கலந்து பயன் பெறுமாறு மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

இம்மருத்துவ முகாமுக்கான ஏற்பாடுகளை தென்னிந்திய திருச்சபையின் அருட்தந்தை றிச்சாட் மேற்கொண்டுள்ளார். (அ-3-267)

# அரும்பொருட் காட்சியகத்தில் களவாடப்பட்ட வாள்கள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு தேசிய அரும்பொருட்காட்சியகத்தில் இடம்பெற்ற களவாடல் சம்பவம் குறித்து கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரான கன்கெட்டாவின் தாயாரின் இருப்பிடத்திற்கு அண்மையில் உள்ள குப்பைத் தொட்டியொன்றில் இருந்து புராதன வாள்களின் மூன்று தகடுகளை இரகசிய பொலிஸார் மீட்டுள்ளனர்.

பியகம சியம்பலாவ டீமோ சந்திக்கருமைமையிலேயே இந்த வாள்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பியகம பிரதேச சபையின் கழிவுப் பொருட்சேகரிப்பு ஊழியர் ஒருவரினால் குறித்த தகடு தற்செயலாக சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இரகசிய பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் ஊடாகவே இந்த வாளின் பகுதிகள் மீட்கப்பட்டு பியகமபிரதேசசபைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த வாளின் பிடியில் நுகவெல அதிகாரம் என சிங்களத்தில் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததாக பிரதேச சபையின் தலைவர் ஆனந்தகனேபொல தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி இரவு அரும்பொருட்காட்சியகத்தில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

பின்னர் ஒக்டோபர் 27 ஆம் திகதி இரகசிய பொலிஸாரால் நீர் கொழும்பு பிரதேச்த்தில் வைத்து திருட்டு சம்பவத்துடன்தொடர்புடைய பிரதான சந்தேகநபரான கன்கெட்டா என்றழைக்கப்படும் லங்சகே பிரியந்த மேரிஸ் என்பவர் கைது செய்யப்பட்டார். தற்போதும் அவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

குறித்த சந்தேகநபரின் தகவல்களுக்கு அமைய நேற்று முன்தினம் மாளிகாவத்தை பிரதேசத்தில் புராதன பெறுமதியுடைய 10 நாணயத்தாள்களும் மீட்கப்பட்டிருந்தன.

இது தவிர தாம் பியகம பிரதேசத்தில் தமது தாயாரின் வீட்டில் இருந்தபோதே களவில் ஈடுபட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

37 வருடங்களின் பின்னரே கன்கெட்டா தமது தாயாரைச் தேடிச் சென்று அவருடன் வசித்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை அரும் பொருட்காட்சியகத்தில் இருந்து களவாடப்பட்டவாள்கள் உட்பபல பொருட்களை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-2)

# சிசுவை கைவிட்டுவிட்டு தாய் தலைமறைவு

தான் பெற்றெடுத்த சிசுவைக் கட்டிலிலேயே விட்டுவிட்டு தாயொருவர் தலைமறைவான சம்பவமொன்று கிண்ணியா தள வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இரண்டே இரண்டு நாளான சிசுவையே இவ்வாறு விட்டுவிட்டு அத்தாய் தலைமறைவாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளதாக கிண்ணியா தள வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

குறித்த பெண் பிரசவ விடுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு அன்றிரவே குழந்தை கிடைத்துள்ளது.

இவரை இன்று வீட்டுக்கு அனுப்புவதற்கு தீர்மானித்திருந்த வேளையிலேயே குறித்த பெண் சிசுவை கட்டிலிலேயே வைத்து விட்டு தலை மறைவாகியுள்ளார். (அ-2)


தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும், உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.No:-0212225392
(ஸ்ரீ-153)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 2<br>உயரம்: 5' 6"<br>கி.பா: 17 1/2, 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை : Computer Engineer 2nd year student,<br>தொ. இல : B - 709 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 3<br>உயரம்: 5'<br>கி.பா: 56, 2 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: O/L.<br>தொ. இல : G - 711 |
| பிறப்பு: 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5' 6"<br>கி.பா : 21 1/4, 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை : A/L, (U.K P.R)<br>தொ. இல : B - 710 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 4<br>உயரம்: 5' 4"<br>கி.பா: 23<br>தொழில்/ தகைமை: BSW, பட்டதாரிபயிலுனர்<br>தொ. இல : G - 714 |
| பிறப்பு: 1972 R.C<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5' 1"<br>கி.பா: 11 3/4<br>தொழில்/ தகைமை: A/L, ஆய்வுகூட உதவியாளர்<br>தொ. இல : B - 712 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>உயரம்: 5' 1"<br>கி.பா: 85 3/4<br>தொழில்/ தகைமை: BSc, MSc, குடியேற்ற உத்தியோகத்தர்.<br>தொ. இல : G - 715 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 6'<br>கி.பா: 11 3/4<br>தொழில்/ தகைமை: LLB (சட்டத்தரணி)<br>தொ. இல : B - 713 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>உயரம்: 5' 4"<br>கி.பா: 19 1/2<br>தொழில்/ தகைமை: BSc, reading BIT,<br>எதிர். பா: சைவ போசனம் விரும்பத்தக்கது.<br>தொ. இல : G - 716 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கு மாணவர்கள் மார்ச் மாதம் இணைக்கப்படுவர்

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பாராளுமன்றில் தெரிவித்தார்.

இம்முறை பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியை கற்க சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 25ஆயிரம் பேருக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படும்.


நேற்று முன்தினம் பிற்பகல் உயர்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதம் ஆரம்பமானது. விவாதங்களின் போது உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கலந்து கொண்டு பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் உரையாற்றுகையில், விரிவுரையாளர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடுகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும். அவை ஒவ்வொன்றாக நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளோம்.

புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும். மேலதிகமாக 5 ஆயிரம் மாணவர்களை சேர்த்துக் கொள்வது என்பது எளிதல்ல. என்றாலும் இவர்கள் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

உபவேந்தர்கள் தமது பல்கலைக்கழகங்களுக்கு தேவையான நிதியை நிதி அமைச்சிடமிருந்து பெற்றார்கள். பல்கலைக்கழகங்களில் உண்டியல் குலுக்கும் நடவடிக்கைகள் இல்லை. தமக்கு விரும்பிய அரசியலில் ஈடுபடலாம். முன்பு அந்த நிலை இருக்கவில்லை. பல்கலைக்கழகங்களில் பாதுகாப்புக்காக தனியார் பாதுகாப்பு சேவை தான் இருந்தது.

இலங்கையிலுள்ள மாணவர்கள் சுமார் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் பேர் வெளிநாடுகளில் கல்வி கற்கிறார்கள். இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து லண்டன் போன்ற நாடுகளில் கல்வி கற்கிறார்கள். இவர்கள் எமது பிள்ளைகள் இல்லையா? இவர்களுக்கு அதே பணத்தை செலவு செய்து இலங்கையிலேயே கல்வி கற்க வசதி செய்து கொடுப்பது தவறானதா?



எமது அரச பல்கலைக்கழகங்கள் எதனையும் தனியார் மயப்படுத்தப் போவதில்லை. அவற்றை மேலும் விரிவுபடுத்துவோம். பலம் மிக்கதாக மாற்றுவோம். அதிகளவு மாணவர்களையும் உள்வாங்குவோம். அத்துடன் தனியார் பல்கலைக்கழகங்களுக்கு 20 வீதம் எமது மாணவர்களையும் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

2013 ஆம் ஆண்டில் மட்டும் கல்விக்காக 2,15,401 மில்லியன் ரூபாவை மொத்தமாக அரசு ஒதுக்கியுள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5 வீதமாகும்.

மத்திய அரசு கல்விக்காக 37,930 மில்லியன் ரூபாவை ஒதுக்குகிறது. மாகாண சபைகளில் கல்விக்காக 65,238 மில்லியன் ரூபாவையும் உயர்கல்விக்கு 27,900 மில்லியன் ரூபாவையும் தொழிற்பயிற்சி அமைச்சுக்கு 8,473 மில்லியன் ரூபாவையும் வேறு அமைச்சுக்களின் ஊடாக கல்விக்காக 14,879 மில்லியன் ரூபாவுடன் மொத்த 2,15,401 மில்லியன் ரூபா அரசு ஒதுக்கியுள்ளது என்றார். (அ-2)

# எச்.ஐ.வி. தொற்றில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

## ஐ.நா.சபை தெரிவிப்பு

எச்.ஐ.வி. தொற்று ஏற்படும் வீதத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதேவேளை, இதற்கான சிகிச்சைகளின்போது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமான மக்கள் பயன் பெறுகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த தொற்று நோய் பரவுதல் வரலாறு காணாத அளவுக்கு குறைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் எயிட்ஸ் நிறுவனம் விபரிக்கிறது.

புதிய எச்.ஐ.வி. தொற்றுக்கள் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் 50 சதவீதத்தால் குறைந்திருக்கின்றது. மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளிலேயே குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் சிகிச்சையும் முன்னேற்றம் கண்டிருக்கிறது.

தொற்று ஏற்பட்டவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் வைரஸ் எதிர்ப்பு மாத்திரைகளை பெறுகின்றார்கள். மாலாவியில் 73 சதவீதத்தாலும் பொட்ஸாவாலாவில் 71 சதவீதத்தாலும் நமீபியாவில் 68 சதவீதத்தாலும் சம்பியாவில் 58 சதவீதத்தாலும் சிம்பாவேயில் 50 சதவீதத்தாலும் தென்னாபிரிக்கா மற்றும் சுவிட்சர்லாந்தில் 41 சதவீதத்தாலும் புதிய எயிட்ஸ் தொற்று குறைவடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

கீழ் சகாரா ஆபிரிக்காவில் எயிட்ஸ் மரணங்கள் ஆறில் ஒரு பங்காக வீழ்ச்சி கண்டுள்ளது. இந்த நோய்க்கு சிகிச்சை பெறுவோரின் தொகை 59 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. தென்னாபிரிக்கா எயிட்ஸ் விடயத்தில்.1.6 பில்லியன் டொலரை உள்நாட்டு நிதியிலிருந்து செலவளித்துள்ளது.

சிறுவர்களின் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுவதைக் குறைப்பதில் ஆகவும் கூடுதல் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. எச்.ஐ.வி. தொற்றுடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறுவர்களில் எச்.ஐ.வி. தொற்றை பூரணமாக இல்லாதொழிப்பது சாத்தியம் என்பது இப்போது தெரிகின்றது என ஐக்கிய நாடுகள் சபையின் எயிட்ஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் சித்திப் கூறியுள்ளார். (அ-2)



சுன்னாகம் பொலிஸாரின் ஏற்பாட்டில் யா/இணுவில் மத்திய கல்லூரியில் அண்மையில் மரம் நாட்டுவிழா நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் ஏ.சதானந்தன் மரம் நாட்டுவதையும் அருகில் பொலிஸ் பொறுப்பதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## செயற்கைக்கோள் ஏவுவது பிற்போடப்பட்டுள்ளது

விண்ணுக்கு ஏவப்பட்டிருந்த தனித்துவமான தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் (சற்றலைட்) ஏவப்படும் திகதி பிற்போடப்பட்டுள்ளதாக பொறியியலாளர் ரோஹித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இச்செயற்கைக்கோள் ஐந்து நாட்களின் பின்னரே விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாகவே செயற்கைக்கோளை ஏவுவதில் பிற்போட வேண்டிய நிலைமை ஏற்பட்டதாக அவர் கூறினார்.

தனித்துவமான தொலைத் தொடர்பு செயற்கைக்கோள் (சற்றலைட்) சீனாவின் சீசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து நேற்றைய தினம் விண்ணுக்கு ஏவுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிரதம நீதியரசர் மீதான தெரிவுக் குழுவில் ராஜிதவும் விமலும் இடம்பெற முடியாது

## வாதிடுகின்றனர் சட்டத்தரணிகள்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஏனைய இரண்டு வழக்குகளையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி விசாரிப்பதற்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரிக்கும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆறு ரீட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அந்த மனுக்களில் நான்கு மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றதுடன் இந்த மனுக்கள் தொடர்பிலான அரசியலமைப்பின் வியாக்கியானத்தை உயர்நீதிமன்றத்திடம் மேன்முறையீட்டு நீதிமன்றம் கோரியிருந்தது.

இந்நிலையில் ஏனைய இரண்டு ரீட் மனுக்கள் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் ஆராய்ந்தது. அந்த மனுக்களில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் விமல் வீரவன்ச ஆகியோருக்கு எதிராக தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழுமத்தில் ஷிராணி பண்டாரநாயக்கவும் உறுப்பினராக இருந்துள்ளார்.

இதனால் இவர்களிடம் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான உளப்பாங்கு இருக்கும் எனவும் இதனால் இவர்களுக்கு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான் குற்றச்சாட்டை விசாரிக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க தகுதியில்லை என இரண்டு சட்டவுரைஞர்களும் மேன்முறையீட்டு நீதிமன்றில் தங்களுடைய ஆட்சேபத்தை தெரிவித்தனர்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து அவ்விருவரையும் விலக்குமாறு கோரும் இந்த விலக்கல் ஆணை கோரும் மனுவை நிமல் வீரக்கொடி, சந்திரபால் குமாரகே ஆகிய இருவரே தாக்கல் செய்திருந்தனர்.

மனுக்களை ஆராய்ந்த நீதிமன்றம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து உறுப்பினர்களை விலக்குமாறு கோரியுள்ள விலக்கல் ஆணை கோரும் மனுக்களானவை மூன்றாம் தரப்பு முறையீடாகும்.

அவ்வாறான மனுவை பாதிக்கப்பட்டவரே செய்ய வேண்டும். அத்துடன் தெரிவுக்குழு அங்கத்தவர்களுக்கு எதிரான உளப்பாங்கு இருக்கும் எனவும் அவரே முறையிட வேண்டுமெனவும் மனுதாரர்களின் சட்டவுரைஞர்களுக்கு அறிவுறுத்தியது.

இது தொடர்பில் மேலும் அறிவுறுத்துவதற்கு முறைப்பாட்டாளர்களின் வழக்குரைஞர்கள் கால அவகாசம் கேட்டதை அடுத்து மனுக்கள் மீதான மேலதிக விசாரணைகளை டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்தி வைத்தது. (அ-2)

# காஸா யுத்தத்திற்கு எதிராக போராட்டம்

## பல்கலை. மாணவர்கள் முன்னெடுப்பு

(கொழும்பு)

பாலஸ்தீனம் காஸாவில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் மனித படுகொலை மற்றும் வன்முறைகளைக் கண்டித்து தேசிய பல்கலைக்கழகங்களில் ஒன்றான தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர்களால் கண்டன பேரணியும் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் நேற்றைய தினம் காலை தென்கிழக்கு பல்கலைக்கழக முன்றலில் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்தனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் இடம் மாறுகின்றோம்!





வடக்கின் முதன்மையான
அச்சகமாகக்
குறுகிய காலத்தில்
எம்மைத் தரமுயர்த்திவைத்த
எமது அன்பான
வாடிக்கையாளர்களுக்கு
அச்சுலகின் நவீனத்துவங்களை
மேன்மேலும்
வழங்கும் பொருட்டு,
புதிய
தொழில்நுட்பங்களுடன் கூடிய
விசாலமான
நிரந்தரப் பணிமனைக்கு
இன்று நாம்
இடம் மாறுகின்றோம்!

**எமது பழைய பணிமனைக்கு மிக அருகாமையில்
அமைந்துள்ள இப்புதிய பணிமனையில்
இன்றுமுதல் உங்கள் தேவைகளை
வழமைபோல நிறைவேற்றிக் கொள்ளலாம்.**

நவீன அச்சுக் கலையின் முன்னோடி

# கரிகணன்



## Harikanan (Pvt.) Ltd.

Printers of the North

#681, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.

Phone : 0094-21-222 2717 / 21-739 7530, Fax : 0094-21-222 2891

www.harikanan.com e-mail: print@harikanan.com

(சி/1593)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு எதிராகவே மக்கள் பிரேரணை கொண்டு வரவேண்டும்

## அசாத்சாலி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் குற்றப் பிரேரணை கொண்டு வர வேண்டுமென கொழும்பு மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத்சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போது அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உண்மையில் பிரதம நீதியரசருக்கு எதிராக அல்ல. இந்த அரசாங்கத்திற்கு எதிராகவே மக்கள் குற்றப் பிரேரணை கொண்டு வர வேண்டும்.

இந்த அரசாங்கத்திற்கு எதிரான ஊழல் மோசடிகள் குற்றச்சாட்டு ஆவணம் ஒரு கிலோமீற்றரை விடவும் நீளமானதாக அமையும். ஆளும் கட்சி அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராகவா பேசுகின்றார்கள்?

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை வழங்குவதாக நான் ஐக்கிய நாடுகள் அமைப்பு, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு வாக்குறுதி அளித்துள்ளேன் என ஏன் ஜனாதிபதியினால் கூற முடியவில்லை.

ஆளும் கட்சி அமைச்சர்கள் கோமளிகளைப் போன்று கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். நாடாளுமன்றில் இந்த ஆளும் கட்சி அமைச்சர்கள் கூறி வரும் பொய்களை இயற்கையினாலேயே ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றார். (அ-2)

# அமைப்புக்கள் இயங்குவதற்கு நிரந்தரக் கட்டடமில்லை

## வள்ளுவர்புர கிராம மக்கள் கவலை

(றெட்பானா)

வள்ளுவர்புரம் கிராம சேவகர் பிரிவில் உள்ள அமைப்புக்கள் நிரந்தர அலுவலக கட்டடங்கள் இன்றி செயற்பட்டு வருவதால் மக்கள் தொடர்பாடல் சீரற்ற நிலையில் காணப்படுகிறது.

இக்கிராம சேவகர் பிரிவில் கமக்கார அமைப்பு, இளைஞர் கழகம், விளையாட்டு கழகம், மாதர் சங்கம், கிராம அபிவிருத்திக்குழு போன்ற அமைப்புக்கள் காணப்பட்ட போதும் அவை அனைத்தும் செயற்படுவதற்கான இடவசதியோ அல்லது கட்டட வசதிகளோ எவையும் காணப்படவில்லை. இங்கு இந்நிலை தொடர்ந்து காணப்படுவதால் இந்த அமைப்புக்கள் உடனான தொடர்புகளை ஏற்படுத்த மக்கள் பல சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அத்துடன் அமைப்புக்கள் அனைத்தும் செயற்படுவதற்கான போதிய கட்டட வசதிகள் இக்கிராமத்தில் காணப்பட்ட போதும் கட்டங்கள் அனைத்தும் விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் ஆளுகையின் கீழ் உள்ளதால் தொடர்ந்தும் இவ் அமைப்புக்கள் செயற்பட முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே, உரிய தரப்பினர் இவ் விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-260)

# தேசிய கை.தொ. அதிகார சபையினால் பயிற்சிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(மல்லாவி)

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் நெறிப்படுத்தலின் கீழ் கிளிநொச்சி மாவட்ட கைத்தொழில் அதிகார சபையினால் வீட்டுமின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், குளிரூட்டி திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஏ.பி. அல்பிரட் அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி நெறிக்கு வடக்கு மாகாணத்தை சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்த 16 வயது தொடக்கம் 35 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்றிருக்க வேண்டும். இப்பயிற்சி நெறி ஒரு வருடம் நடைபெறவிருப்பதனால் தொடர்ச்சியாக இப்பயிற்சி நெறிக்கு சமுகமளிக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் இப்பயிற்சிகள் 6 மாத உள்ளக பயிற்சியும் 6 மாத வெளிக்கள பயிற்சியும் கொண்டதாக அமையும்.பயிற்சி முடிவில் அரச அங்கீகார சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களினை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு முன் மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை, ஆனந்தபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கையளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.(அ-3-15)

# இந்தியாவும் அமெரிக்காவும் மௌனிகளாக இருப்பது ஏன்?

## புதிய இடதுசாரி முன்னணி தலைவர் கேள்வி

(கொழும்பு)

இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வருவதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற மனிதவுரிமைமீறல்கள் மற்றும் போர்க்குற்ற செயல்களுக்கு எதிராக அமெரிக்காவும் இந்தியாவும் குரல் கொடுக்காது மௌனம் காத்து வருவதற்கு இதுவே காரணம். அமைதியான முறையில் இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கைக்கு ஆதரவளித்து வருகின்றன.

பலம்பொருந்திய நாடுகள் இலங்கைக்கு மறைமுகமாக அளித்து வரும் ஆதரவினால் ஐக்கிய நாடுகள் அமைப்பில் இலங்கை தொடர்பான விடயங்களில் மெத்தனப் போக்கு பின்பற்றப்பட்டு வருகின்றது.

இலங்கையுடன் அமெரிக்காவும் இந்தியாவும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. 13 ஆம் திருத்தச் சட்டத்தை தாண்டிய தீர்வு வழங் குவதாக ஜனாதிபதி சர்வதேசத்திற்கு வாக்களித்திருந்தார்.

எனினும் ஆளும்கட்சியின் சிலர் 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு கோரி வருகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஆக்கிரமிக்கிறது டெங்கு; நல்லூரில் 71 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் 71 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றுநோய் தடுப்பு பிரிவின் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த தகவல்களின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் கடந்த வருடத்தினை விட டெங்கு நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை இந்த வருடம் அதிகரித்து வருகின்றது.

கடந்த வருடம் 240 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட அதேவேளை யாழ்ப்பாணம் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் 74 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டிருந்தனர்.

ஆனால், இந்த வருடம் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை 388 டெங்கு நோயாளர்கள் யாழ்.குடாநாட்டில் இனங்காணப்பட்டதோடு நல்லூர் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் 71 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் தெல்லிப்பழையில் 36 பேரும் சங்கானையில் 12 பேரும் சண்டிலிப் பாயில் 28 பேரும் ஊர்காவற்றுறையில் 5 பேரும் யாழ்ப்பாணத்தில் 40 பேரும் கோப்பா யில் 27 பேரும் பருத்தித்துறையில் 43 பேரும் கரவெட்டியில் 27 பேரும் சாவகச் சேரியில் 57 பேரும் உடுவிலில் 34 பேரும் வேலணையில் 8 பேரும் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# தப்பி ஓடிய கைதிகள் பிணையில் விடுதலை

(கொழும்பு)

பல்வேறு குற்றங்களுக்காக வெலிக்கடை சிறையில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த போது அங்கு கலவரம் இடம்பெற்ற வேளையில் சிறையிலிருந்து தப்பியோட முயன்ற 7 சிறைக்கைதிகளை ரொக்கப் பிணையில் செல்ல கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்றைய தினம் அனுமதித்துள்ளார்.

இந்த 7 பேரும் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் ஆவர். பிணையில் விடப்பட்ட இவர்கள் ஏற்கனவே செய்த குற்றங்களுக்கான தண்டனையை அனுபவிக்க மீண்டும் சிறைக்கு அனுப்பப்பட்டனர். (அ-2)



க.பரணீதரனின் கலை இலக்கிய மாத சஞ்சிகையான **ஜீவநதி** சஞ்சிகையின் 50 ஆவது இதழ் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமையுரையினை எழுத்தாளர் தெணியான், வாழ்த்துரையினை ச.தர்மரத்தினம் ஆகியோர் ஆற்றுவதையும் நூலின் முதற்பிரதியை தமிழ் ஆசான் கி.நடராசாவிடமிருந்து மா.லோகசிங்கம் பெற்றுக் கொள்வதையும் நடுவில் சஞ்சிகை ஆசிரியர் நிற்பதையும் படங்களில் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

110

### இலங்கையின் அரசியல், சமூக, கல்வி மறுமலர்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சமூக, கல்வி, சமய மறுமலர்ச்சிக்காக



ஜேம்ஸ் ரி. ரட்ணம்

உழைத்தவர்கள் என இலங்கைச் சுதேசிகள் பலரைக் குறிப்பிடலாம். இவர்கள் ஆங்கிலக்கல்வி கற்ற பெருமக்களாக இருந்தனர். மிசனிரி கல்வி நிலவிய காலவேளையில் தம் சமயத்தையும் மொழியையும் அவர்கள் நேசித்தனர். ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரர், இரத்தலானை தர்மராம தேரர் என்போர் பௌத்த மதத்தின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டனர். அவர்களுடன் கேர்னல் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் என்ற அமெரிக்கர் பௌத்தத்தின் மறுமலர்ச்சிக்குப் பெரும் தூண்டுதலாகவிருந்தனர். 1886 இல் ஒல்கொட் கொழும்பில் ஆனந்தாக் கல்லூரியையும் நாடெங்கும் பல பாடசாலைகளையும் ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் அநகாரிக்க தர்மபாலா என்பவர் பௌத்த மறுமலர்ச்சிக்கும் கல்விக்கும் பெரும் பங்காற்றினார். அதேபோல வடவிலங்கையில் கல்வி




கப்டன் எட்வேர்ட் ஹென்றி பெட்டிஸ்

யின் மறுமலர்ச்சிக்கும் சமயமறுமலர்ச்சிக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஒரு இயக்கமாக நடாத்தினார். நாட்டில் வாழ்ந்த முஸ்லிம்களிடையே எம்.சி. சித்திலெப்பை என்பவர் முஸ்லிம்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்தார். அதனால் தேசிய இயக்கங்களும் சமய இயக்கங்களும் உருவாகின.

### சிங்கள- முஸ்லிம் கலவரம்

1915 ஆம் ஆண்டு சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் முதலாவது கலவரம் நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்றது. 1915 மே மாதம் 29 ஆம் திகதியிலிருந்து 1915 யூன் மாதம் 5 ஆம் திகதிவரை இலங்கையின் சில பகுதிகளில் சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கும் பெரும் இனக்கலவரம் ஒன்று நடந்து முடிந்தது. 1915 ஆம் ஆண்டு புத்தரின் ஜனன தினத்தில் கண்டியில் சமய ஊர்வலம் ஒன்று, பெரகரா ஒன்று நடந்தது. அப்போது கம்பாயா முஸ்லீம்கள் கற்களை எறிந்து கைகளைத் தட்டிக்கேலி செய்தனர். கலவரம் வெடித்தது. கம்பளையிலிருந்த



டி.எஸ். சேனநாயக்க

பள்ளிவாசல் சிங்களக் காடையர்களால் சேதமாக்கப்பட்டது. கொழும்புக்கும் அக்கலவரம் பரவியது. சமய எதிர்புணர்வு இக்கலவரத்திற்கு வெளிப்படையாகக் காரணமாக அமைந்த போதும் யதார்த்தத்தில் இக்காலகட்டத்தின் பொருளாதார அரசியல் நெருக்கடியையே இது பிரதிபலித்தது.

அந்நியர்கள் எடுத்துச் செல்வதாக எடுத்துரைத்தனர். மண்ணில் மைந்தரான பௌத்தர் பின்தள்ளப்படுவதாக எடுத்துரைத்தார். கரையோர முஸ்லிம்களுடனும் கொச்சிக்காரர்களுடனும் அந்நியரிடமும் சிங்களவர் கொடுக்கல் வாங்கல் வைத்திருக்கக் கூடாதென லக்மின எழுதியது, "முஸ்லிம்கள் இங்கு வேரூள்றிய எம் பகைவர்கள்" என தினமின எழுதியது, இவற்றின் பின்னணியில் பௌத்த இஸ்லாமியக் கலவரம் மூண்டது. மார்சல் லோ அமுல்படுத்தப்பட்டது. நூற்றுக்கணக்கானோர் இறந்தனர். சிங்களத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். டி.டி.பிரிஸ் என்பவர் முஸ்லிம் கடைகளை தாக்கியமை நிரூபிக்கப்பட்டு சுடப்பட்டார். கேலவிதாரணவுக்கும் பெர்னாண்டோ விஜயசேகராவுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது.



சேர். பொன்னம்பலம் அருணாச்சலம்

25 பேர்வரை கைது செய்யப்பட்டார்கள். பல வீடுகளும் உடைக்கப்பட்டன. இந்தக் கலவரத்தை அடக்க முடியாத ஆங்கில அரசு, மார்ஷல் லோவைப் பிரகடனப்படுத்தியது. பலர் சுடப்பட்டார்கள். சிங்களத் தலைவர்களில் முதன்மையாக பலர் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் எஃப்.ஆர்.சேனனாயக்கா, டி.எஸ்.சேனநாயக்கா, சீ.பட்டுவந்துடாவை, கேவவிதாரண , டி.பி. ஜெயதிலக, ஏ.ஈ. குணசிங்க டபிள்யூ. ஏ.சில்வா ஆகியோர் அடங்குவர். இவ்வாறு கைதானவர்கள் விசாரணையின்றிச் சுட்டுக் கொல்லப்படவிருந்தார்கள். அவ்வேளையில் சேர்.பொன்னம்பலம் அருணாச்சலம், ஜேம்ஸ் பீரிஸ் ஆகியோர் அங்கிருந்து பிரித்தானியாவுக்குச் சென்று குடியேற்றச் செயலாளரைச் சந்தித்து அவர்களுக்கு மன்னிப்புப் பெற்று நாடு திரும்பினர். அதற்கு பிரதியாக சிங்களத் தலைவர்கள் சேர்.பொன்னம்பலம் அருணாச்சலத்தை தேரில் ஏற்றித் தாங்களே குதிரைகளாக நின்று கொழும்பு வீதிகளில் இழுத்தார்கள். அதனால் 1917 இல் இலங்கை அரசியல் சீர்திருத்தக்கழகம் என்ற அமைப்பு சேர்.பொன்.

பலம் அருணாச்சலம், சேர்.ஜேம்ஸ் பீரிஸ், எஃப்.ஆர்.சேனனாயக்கா, ஈ.டபிள்யூ.பெரேரா ஆகியோர் இலங்கையில் அரசியல் சீர்திருத்தங்களை ஏற்படுத்த முயன்றனர். இலங்கைத் தேசிய காங்கிரசின் முதல் தலைவராக பொன்னம்பலம் அருணாசலம் தெரிவு செய்யப்பட்டார். இந்த அமைப்பு சட்டசபையில் கூடிய எண்ணிக்கையான பிரதிநிதித்துவத்தைக் கோரியது. 1921 இல் முஸ்லிம்கள் தம்மை ஒரு தனி இனமாக நோக்குமாறு கோரிக்கை வைத்தனர். தம்மைத் தமிழர் என்ற இனத்துள் அடக்க வேண்டாமென்றும்



ஈ. டபிள்யூ.பெரேரா

# ஆங்கிலேயர் காலம்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

இலங்கை வர்த்தகத்தில் முஸ்லீம்களின் பங்கு அதிகமாகவிருந்தது. தர்மபால, அவர்களை [illegible]

அருணாச்சலத்தின் தலைமையில் ஆரம்பமாகியது. அதன்பின்னர் அரசியல் சீர்திருத்தத்துக்கு 1919 ஆம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது. சேர்.பொன்னம்

இலங்கை முஸ்லிம்கள் இந்திய முஸ்லிம்கள் எனப்பாகுபடுத்தாது இலங்கை முஸ்லிம்கள் என்ற ஒரு வகுப்புக்குள் மதிக்குமாறு முஸ்லிம் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

289



## கலவரம் மூளும் விதம்

ஞானேஸ்வரன் என்ற யோகி தம் சீடன் குணசீலனுடன் ஊர் ஊராகச் சென்று கொண்டிருந்தார்.

ஒருநாள் இருட்டியபோது ஒரு கிராமத்தை அடைந்தார்கள். அங்கு அவர்கள் யாரோ ஒருவனின் வீட்டுத் திண்ணையில் படுத்து இளைப் பாறலானார்கள். அந்த வீடு பாலுசாமி என்ற விவசாயிக்குச் சொந்தமானது.

அன்று விடியும் வேளையில் நாகசாமி என்ற விவசாயி தான்கொண்டு வந்த ஏரை சுவர் ஓரமாக நிறுத்தினான். பின்பு கதவைத் தட்டி பாலுசாமியைக் கூப்பிட்டான்.

பாலுசாமி கண்விழித்து எழுந்து வந்ததும் நாகசாமி பாலு! என் வேலையை நீ கொடுத்த ஏரால் முடித்துவிட்டேன். உன் ஏரையும் கொண்டு வந்து வைத்துவிட்டேன். நீ செய்த உதவிக்கு மிக்கநன்றி! என்று கூறிவிட்டுச் சென்றான்.

சற்றுநேரத்தில் சூரியோதயம் ஆகி நன்கு வெளிச்சம் படர்ந்தது. அப்போது பாலுசாமி எழுந்து வந்து திண்ணை ஓரத்தில் நாகசாமி வைத்து விட்டுப்போன ஏரைப் பார்த்தான்.

### அம்புலிமாமா கதைகள்

• அதன் முனை உடைந்திருப்பது கண்டு பாலுசாமி இந்தப் பயல் நாகசாமி இருட்டில் உடைந்த ஏரை வைத்து விட்டு என்னை ஏமாற்றவா பார்க்கிறான்! அவனை விட்டேனா பார்!என்று கறுவிக் கொண்டே நாகசாமியின் வீட்டை அடைந்து வாசலில் நின்றவாறே ஏய் நாகா! வெளியே வா! என்னையா ஏமாற்றினாய்? என் ஏரை உடைத்துவிட்டு இருட்டோடு இருட்டாக அதைக் கொண்டு என் வீட்டுத் திண்ணையில் வைத்துவிட்டு அது பற்றி எதுவுமே என்னிடம் கூறாமல் வந்து விட்டாயே! இதென்ன ஏமாற்று வேலை? என்று கோபத்தோடு கத்தினான்.

நாகசாமி வெளியில் வந்து நான் ஒன்றும் உன்னை ஏமாற்றவில்லை. உன் ஏரையும் உடைக்கவில்லை. நீதான் அநியாயமாகப் பொய் சொல்கிறாய் என்றான்.



அதுகேட்டு பாலுசாமி ஏய் நாகா! நானா பொய்யன்? நீதான் அண்டப்புளுகன் என்றான். அதைக்கேட்ட நாகசாமி கோபம் கொண்டு ஓங்கி அறைய பதிலுக்கு பாலுசாமி அவனை உதைத்தான்.

உடனே நாகசாமி, ஐயோ! பாலுசாமி என்னைக் கொல்கிறானே! இதைக்கேட்பார் யாரும் இல்லையா? என்று உரக்கக் கூவினான். அவன் கூக்குரலைக் கேட்ட அக்கம் பக்கத்தவர்கள் தடி, கத்தி எனக் கைக்குக் கிடைத்தவற்றை எடுத்துக்கொண்டு ஓடி வந்து பாலுசாமியைத் தாக்கத் தொடங்கினார்கள்.

பாலுசாமியும் தன் சகோதரர்களையும் உறவினர்களையும் உதவிக்கு வரும்படி உரத்த குரலில் கூவி அழைத்தான். அவர்களும் வந்துசேரவே இரு கோஷ்டியினரும் சண்டையிட்டுக் கொண்டார்கள்.

இதைக்கண்ட ஞானேஸ்வரனும் அவரது சீடன் குணசீலனும் ஓடிவந்து இருகோஷ்டியினர் மத்தியில் நின்று சண்டையை நிறுத்துங்கள். ஏன் காரணம் இல்லாமல் வீணாகச் சண்டை போடுகிறீர்கள்? என்று கேட்டார்கள்.

பாலுசாமியும் நாங்கள் ஒன்றும் வீணாகச் சண்டை போடவில்லை. காரணத்தோடு தான் சண்டை போடுகிறோம். இந்த நாகசாமி தன் நிலத்தை உழுவதற்காக என் ஏரை வாங்கிக்கொண்டு போனான். அதை உடைத்து திருப்பிக் கொடுக்கும்போது நான் பார்க்க மாட்டேன் என்று இருட்டில் என் வீட்டில் வைத்து விட்டுப் போய்விட்டான். காலையில் நான் எழுந்து போய்ப் பார்த்த போது ஏர் உடைந்திருப்பது தெரிந்திருந்தது. அதை இவன் எனக்குத் தெரிவிக்காமல் ஏமாற்றி அதுபற்றிக் கேட்ட போது அடித்து விட்டான் என்று



கூறினான்.

நாகசாமியும் இவன் பொய் சொல்கிறான். இவனது எரை நான் உடைக்கவில்லை.

இவன் கொடுத்தது போலவே பழுதில்லாமல் இவனது வீட்டுத் திண்ணையில் வைத்து விட்டு இவனிடம் சொல்லி விட்டுத் தான் போனேன் என்றான். பாலுசாமியோ என் ஏரை உடைத்துவிட்டு ஒரேயடியாக இல்லை என்று சாதிப்ப தைப் பாருங்கள் என்று உறுமினான்.

ஞானேஸ்வரனும் நீங்கள் இருவர் சொல்வதும் உண்மையே. நாகசாமி ஏரைக் கொண்டு வந்துவைத்த போது அது ஒடிந்திருக்கவில்லை.

ஆனால் அவன் போன சற்று நேரத்திற்குப் பின் அங்கு வந்த ஒரு முரட்டுக்காளை பாலுசாமியின் வீட்டுத்திண்ணையில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த ஏரை முட்டிவிட்டுச் சென்றது. இதை நானும் என் சீடனும் பார்த்தோம். அந்தக்காளை தான் ஏரை உடைத்திருக்கி றது. இதை அறியாமல் வீணாகச் சண்டை போட்டுக் கொண்டீர்களே என்றார்.

அதுகேட்டு பாலுசாமியும் நாகசாமியும் ஓ! இப்படியா நடந்திருக்கிறது? இதை அறியாமல் சண்டை போட்டோமே! எல்லோரும் எங்கள் இருவரையும் மன்னியுங்கள் என்று கூட்டத்தவரிடமும் யோகியிடமும் அவரது சீடரிடமும் கைகூப்பி வணங்கி மன்னிப்புக் கோரினார்கள்.

ஞானேஸ்வரரும் இது போலத்தான் தீர விசாரித்துத் தெரிந்துகொள்ளாமல் மக்கள் கலவரங்களில் ஈடுபடுகிறார்கள். எதையும் நன்கு ஆலோசித்தால் உண்மை புலப்படும். இனியாவது எதையும் நன்கு யோசித்துப் பார்த்து விட்டுச் செயற்படுங்கள் என்று அறிவுரை கூறிவிட்டுச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகள் இரவோடு இரவாக நடைமுறைப்படுத்த முடியாது

## செக். தூதுக்குழுவிடம் கூறினார் ஹக்கீம்

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதந்துரைகளை செயற்படுத்தும் போது மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் கையாள உள்ள வழிமுறைகள் பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படும் அந்த விதந்துரைகளையும் இரவோடு இரவாக நடைமுறைப்படுத்துவது அறவே சாத்தியமற்றது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதற்கான கால வரையறைகளை ஜனாதிபதி செயலணி அடையாளப்படுத்தி உள்ளதாகவும நீதியமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள செக்குடியரசின் நாடாளுமன்ற தூதுக்குழுவினருக்கும் அமைச்சர் ஹக்கீமுக்கும் இடையிலான சந்திப்பொன்று நீதி அமைச்சில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், செக்குடியரசின் நால்வர் அடங்கிய உயர்மட்ட தூதுக்குழுவினருக்கு மனித உரிமைகளுக்கான தேசிய செயற்றிட்டத்தின் பிரதியொன்றை நீதி அமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா அமைச்சர் ஹக்கீம் முன்னிலையில் கையளித்தார்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதந்துரைகள் எவ்வாறு படிப்படியாக செயற்படுத்தப்படும் என்பது சரிவர இனங்காணப்பட்டிருப்பதாகவும் நீதித்துறை சார்ந்த அதன் முக்கிய அம்சங்கள் மீது தமது அமைச்சின் கவனம் பெரிதும் ஈர்க்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

சர்வதேச சமூகத்தின் ஒரு நம்பிக்கை வாய்ந்த உறுப்பினர் என்ற முறையில் யுத்தத்திற்கு பிந்திய கடப்பாடுகளை இலங்கை நன்கு மதிப்பதாகவும் 30 ஆண்டு காலமாக நீடித்த கோர யுத்தத்தின் பின்னர் நாடு மீண்டும் விழித்தெழுகின்ற சூழ்நிலையில் ஆணைக்குழுவின் அனைத்து விதந்துரைகளையும் இரவோடு இரவாக நடைமுறைப்படுத்துவது அறவே சாத்தியமற்றதாகும்.

ஆயினும் விதந்துரைகளை அமுல்படுத்துவதும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை கட்டம் கட்டமாக செயற்படுத்துவதும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் நீதிமன்றங்களின் கட்டமைப்பு பற்றியும் மிகவும் வெற்றிகரமாக இந்நாட்டில் செயற்பட்டு வரும் இணக்க சபைகளின் செயற்பாடுகள் பற்றியும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

யுத்தத்திற்கு பிந்திய இன்றைய சுமுகமான சூழலில் அவற்றின் பயன்பாடு நாட்டின் வடகிழக்கு மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருப்பது பற்றியும் 6 ஆயிரம் சுயேட்சை உறுப்பினர்கள் நாடளாவிய ரீதியில் அவற்றில் பணியாற்றுவது பற்றியும் சர்ச்சைக்குரிய பலவேறு கொடுக்கல் வாங்கல்கள், நிலபுலன்கள் பற்றிய விவகாரங்களுக்கு அவற்றினூடாகஇணக்கத் தீர்வுகளை காண்பது பற்றியும் அமைச்சர் விபரித்தார். (அ-2)

# முன்னாள் இராஜதந்திரிக்கு பிரிட்டன் நீதிமன்று தண்டம்

(கொழும்பு)

இலங்கை முன்னாள் இராஜதந்திரி ஒருவருக்கு பிரித்தானிய நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. போலந்துக்கான இலங்கை தூதுவரும் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான டியுடர் குணவர்தனவிற்கு எதிராகவே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உடற்பயிற்சி நிலையமொன்றில் கடமையாற்றிய பெண் ஒருவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக 77 வயதான டியுடர் குணவர்தனவின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. லண்டன் ஓல்ட் பெய்லி நீதிமன்றம் டியுடருக்கு தண்டனை விதித்துள்ளது.

ஆயிரம் பவுண்ட் அபராதமும் ஆயிரம் பவுண்ட் நட்டஈடும் சட்டச் செலவாக ஆயிரத்து 250 பவுண்ட்களையும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயல்களில் ஈடுபடக் கூடாது என டியுடருக்கு நீதிமன்றம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறித்த பெண் உதவியாளர் தம்முடன் தகாத முறையில் நடந்து கொள்ள முயற்சித்ததாக டியுடர் குற்றம் சுமத்தியிருந்தார். எனினும் வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட ஜீரிகள் டியுடர் குற்றவாளி என்பதனை உறுதிப்படுத்தியுள்ளனர். (அ-2)




★1227-போலந்து இளவரசன் முதலாம் லெஸ்செக் படுகொலை செய்யப்பட்டான்.

★1248-காஸ்டிலின் மூன்றாம் பேர்டினண்ட் மன்னனின் படையினர் செவில் நகரைக் கைப்பற்றினர்.

★1499-இங்கிலாந்தின் அரசாட்சிக்கு உரிமை கோரிய பேர்க்கின் வோர்பெக், லண்டன் கோபுரத்தில் இருந்து தப்பியோட முயல்கையில் கைதாகி தூக்கிலிடப்பட்டார். இவர் 1497 இல் நான்காம் எட்வேர்ட்டின் மகன் என உரிமை கோரி இங்கிலாந்தை முற்றுகையிட்டார்.

★1867-இரண்டு ஐரியர்களைச் சிறையிலிருந்து வெளியேற உதவியமைக்காக மூன்று ஐரியத் தேசியவாதிகள் இங்கிலாந்து மான்செஸ்டரில் தூக்கிலிடப்பட்டனர்.

★1890-நெதர்லாந்து மன்னன் மூன்றாம் வில்லியம் ஆண் வாரிசு இல்லாமல் இறந்தான். அவனது மகள் இளவரசி வில்ஹெல்மினா அரசியாவதற்கு ஏதுவாக சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டது.

★1936-முதலாவது லைஃப் இதழ் வெளியிடப்பட்டது.

★1940-இரண்டாம் உலகப் போர்: ருமேனியா அச்சு அணி நாடுகளுடன் இணைந்தது.

★1955-கொக்கோஸ் தீவுகள் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு கைமாறியது.

★1971-மக்கள் சீனக் குடியரசின் பிரதிநிதிகள் முதற்தடவையாக ஐக்கிய நாடுகள் அவையில் சீனாவுக்காகப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

★1978-இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் சூறாவளி தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

★1979-மவுண்ட்பேட்டன் பிரபுவைக் கொலை செய்த குற்றத்துக்காக ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த தொமஸ் மக்மாகன் என்பவருக்கு டப்ளினில் ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது.

★1980-தெற்கு இத்தாலியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் 4 ஆயிரத்து 800 பேர் உயிரிழந்தனர்.

★1996-எதியோப்பிய விமானம் கடத்தப்பட்டு எரிபொருள் முடிந்த நிலையில் இந்துமா கடலில் கொமொரோஸ் அருகில் வீழ்ந்ததில் 123 பேர் உயிரிழந்தனர்.

★1998-கம்போடியத் தலைவர் ஹுன் சென்னுக்கும் இளவரசர் நொரொடோம் ரனாரிட்டுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

★2003-வாரக்கணக்கில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களை அடுத்து ஜோர்ஜிய ஜனாதிபதி எடுவார்ட் ஷெவர்நாட்செ பதவி விலகினார்.

★2005-லைபீரியாவின் தலைவராக எலன் ஜான்சன் சர்லீஃப் தெரிவு செய்யப்பட்டார். ஆபிரிக்க நாடொன்றின் முதலாவது பெண் தலைவர் இவராவார்.

★2007-இந்தியாவின் அரியலூர் மாவட்டம் உருவாக்கப்பட்டது.

★2007-ஆர்ஜென்டீனாவுக்குத் தெற்கே பயணிகள் கப்பல் ஒன்று மூழ்கியதில் 154 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புகள்**

★1921-சுரதா, கவிஞர் (இ.2006)

★1926-பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா, இந்திய ஆன்மீகவாதி

**இறப்புக்கள்**

★1973-வி.அ.அழகக்கோன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

★1990-ரூவால் டால், ஆங்கில எழுத்தாளர் (பி.1916)

# பாதீனிய அழிப்பு நடவடிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட செயலகமும் வவுனியா பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பாதீனிய அழிப்பு தினம் நேற்று வவுனியாவில் அனு ஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் அதிகரித்து வரும் பாதீனிய களையினால் சுற்றுச் சூழல் பாதிப்படைவதுடன் ஏனைய பயன் தரு பயிர்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் நிலையும் காணப்படுகின்றது.

இதேவேளை, ஒரு பாதீனியக் களையின் பூவில் இருந்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கன்றுகள் உருவாகின்றன. எனவே இவற்றை ஆரம்பத்தில் கட்டுப்படுத்துவதனால் மாத்திரமே முற்றாக பாதீனியக் களையை வவுனியாவில் இருந்து அகற்ற முடியுமென வவுனியா பிரதேச செயலகத்தின் திட்ட பொறுப்பதிகாரி, தெரிவித்தார்.

அரச நிறுவனங்கள் உட்பட கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் என்பன சிரமதானம் மூலம் பாதீனியத்தை கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட வேண்டுமென முன்னர் கோரப்பட்டிருந்தது. (அ-9-266)

# நெற் செய்கையில் கபிலநிற தண்டுத்தத்தியின் தாக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பெரும் போக நெல்வயல்களில் கபில நிறத் தத்தியின் தாக்கம் இவ்வாண்டு இளம் பருவத்திலேயே அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை உரிய காலத்தில் கட்டுப்படுத்தாது விடின் நெற்செய்கையாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

அண்மையில் பெய்த பருவமழையைத் தொடர்ந்து வெப்பமான காலநிலையும் பனியுடன் கூடிய ஈரப்பதனும் கொண்ட காலநிலையும் பயிர்கள் மட்டப்பெயர்ச்சி பருவத்தில் வளர்ச்சியைத் தூண்டுவதற்குரிய நைதரசன் பசளைப் பாவனையும் செய்யப்படும் நிலையில் கபில நிறத்தண்டுத்தத்தியின் தாக்கம் பெருக்கம் அடைவதற்கு சாதகமாக இருப்பதுடன் கட்டுப்படுத்தாது விடின் நெல் மணிகள் முற்றாக புதராகும் நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, நெற்செய்கையாளர்கள் மேலதிக விபரங்களுக்கு தங்கள் பகுதி விவசாய போதனாசிரியரிடமோ அல்லது பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்துடனோ 0212225726, 0778065315 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி தகவலை பெற்றுக் கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறவாத விழிகளையும் திறக்க வைக்கும் கேள்விகள்

ராஜீவ் படுகொலை- தூக்குக்கயிற்றில் நிஜம் என்னும் தலைப்பில் நண்பர் திருச்சி வேலுச்சாமி எழுதியுள்ள நூல் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தப்போகும் நூலாகும். ஏற்கனவே தமிழகமெங்கும் பலநூறு கூட்டங்களில் அவர் தெரிவித்த உண்மைகளையே இப்போது நூலாக பதிவு செய்திருக்கிறார்.

ராஜீவ் படுகொலையின் பல உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. இந்தக் கொலையின் பின்னணியில் இருந்த சதிகாரர்கள் இன்னமும் நாட்டில் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். நீதி, நேர்மை, உண்மை ஆகியவை முற்றிலுமாக மறைக்கப்பட்டுவிட்டன. ராஜீவ் கொலை வழக்கின் புலன்விசாரணையில் தொடங்கி வழக்கு நடத்தப்பட்ட விதமும் தீர்ப்பு அளிக்கப்பட்ட வரையிலும் பல உண்மைகள் ஆழக்குழித்தோண்டி புதைக்கப்பட்டுள்ளன.

தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களின் கொலை வழக்கின் விசாரணையும் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கொலை வழக்கின் விசாரணையும் பகிரங்கமாகத்தான் நடத்தப்பட்டன. ஆனால், ராஜீவ் கொலை வழக்கின் விசாரணை தடா நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட போது இரகசியமாக நடத்தப்பட்டது. அது பற்றிய விவரங்கள் நாட்டு மக்களுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டன. உண்மைக்குற்றவாளிகளை மறைக்கும் நோக்கத்தில்தான் தொடக்கத்திலிருந்து எல்லாமே நடத்தப்பட்டன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் தமிழகத்தில் பரவிவிடாமல் தடுக்கும் கருவியாக ராஜீவ் கொலை வழக்கை டில்லி பயன்படுத்தியது. அதனால்தான் இந்தக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேரில் 13 பேர் தமிழ் நாட்டுத் தமிழர் 13 பேர் ஈழத்தமிழர்கள். சரிசமமான எண்ணிக்கை என்பது தற்செயலானது அல்ல. ஆழமான உள்நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்பட்டது. வளர்ந்து வரும் தமிழ் தேசிய உணர்வை சிதைப்பதற்காக இந்தச் சதி வகுக்கப்பட்டது. இந்த உள்நோக்கத்துடனே சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழு தனது புலன் விசாரணையை நடத்தியது.

அகில இந்திய ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியசாமி அகில இந்திய செயலாளராகத் திருச்சி வேலுசாமி பதவி வகித்தார். சுப்ரமணியசாமி தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்யும்போதெல்லாம் உடன் பயணம் செய்பவர் வேலுசாமி ஆவார். சு.சாமியின் நம்பிக்கைக்குரிய மிக நெருங்கிய தோழராகத் திகழ்ந்தார்.

1991 மே 21 ஆம் திகதி ராஜீவ் படுகொலை செய்யப்பட்டநாளிலும் அதற்கு முன்பாக 2 நாட்களும் தமிழ்நாட்டில் சுப்ரமணியசாமி சுற்றுப்பயணம் செய்தார். அப்போது அவர் நடந்துகொண்ட விதம், பேசிய பேச்சுக்கள் உடனிருந்த வேலுச்சாமியின் உள்மனதில் சந்தேக அலைகளை எழுப்புகின்றன. அதுபற்றி விரிவாக இந்நூலின் அவர் பதிவுசெய்திருக்கிறார். பிறகு நன்கு விசாரித்து சுப்பிரமணியசாமிக்கு இந்தக் கொலையில் தொடர்பிருப்பதை அறிந்துகொண்ட வேலுசாமி முதலில் திடுக்கிட்டபோதிலும் உண்மைக் குற்றவாளிகளை அம்பலப்படுத்த வேண்டும் என முடிவு செய்து ஜெயின் கமிசன் முன் அறிக்கை அளிக்கிறார். சோனியா காந்தியைச் சந்தித்துத் தானறிந்த உண்மைகளைக் கூறுகிறார்.

தனது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் தான் கண்டறிந்த உண்மைகளைத் தமிழ் நாடெங்கும் கூட்டங்கள் போட்டுக் கூறுகிறார். இடையில் மிரட்டல்கள், உருட்டல்கள், ஆசை வார்த்தைகளைச் சந்திக்க நேர்ந்த போதிலும், அஞ்சாமல் தனது பணிகளைத் தொடர்கிறார். சந்திரசாமி, சுப்பிரமணியசாமி ஆகியோர் மீது பகிரங்கமாக அவர் குற்றம் சாட்டியும்கூட புலன் விசாரணைக் குழுவினர் அவற்றை கருத்தில் கொள்ளாமல் புலிகளை மையமாகக் கொண்டே செயற்பட்டனர்.

உலகம் உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் செயற்பட்ட விதத்தை நூல் நெடுகிலும் வேலுசாமி விவரிகிறார். யாருக்கும் அஞ்சாமல் யாருக்கும் விலைபோகாமல் அவர் ஆற்றிய பணி பாராட்டுக்குரியது. வேலுசாமி விடுத்த அடுக்கடுக்கான கேள்விகளுக்கு விடை இன்னமும் கிடைத்தபாடில்லை.

அதுமட்டுமல்ல, ராஜீவ் கொலை குறித்த பல கேள்விகளுக்கும் விடை அளிக்கப்படவில்லை. அவற்றுள் சில,

1.ராஜீவ் கொலை குறித்து விசாரிப்பதற்காக நீதிபதி ஜே.எஸ்.வர்மா தலைமையில் விசாரணைக்குழு ஒன்றை அப்போதைய பிரதமர் சந்திசேகர் ஆட்சி, அமைத்தது. ராஜீவ் காந்திக்குச் செயற்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறை இருந்ததா? என்பதைப் பற்றித்தான் இந்தக் கமிசன் விசாரிக்கும் என்றும் இந்தக் கொலைக்கான சதியின் பின்னணி குறித்து கமிசன் ஆராயாது என்றும் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது. இந்த வரம்புக்கு உட்பட்டு விசாரணை நடத்திய ஜே.எஸ்.வர்மா தனது அறிக்கையை 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசிடம் அளித்தார். ஆனால், ஐந்தாண்டு காலமாக இந்தக் கமிசன் அளித்த பரிந்துரைகள் எதுவும் அமுலாக்கப்படவில்லை. ஆனால், காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பின் காரணமாக இந்தப் பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டிய கட்டாயம் பிரதமர் நரசிம்மராவ் அரசுக்கு ஏற்பட்டது. சில மூத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கமிசன் செய்த முக்கியமான பரிந்துரை குறிப்பிடத்தக்கதாகும். முன்னாள் அமைச்சரவைச் செயலாளர் வினோத் பாண்டே உளவுத்துறை தலைவர் எம்.கே. நாராணன், உள்த்துறைச் செயலாளர் சிரோன்மணி சர்மா, பாதுகாப்புச் செயலாளர் ஜி.எஸ்.வாஜ்பாய் ஆகியோர்மீது எப்போது நடவடிக்கை எடுக்கப் பட்டதென்று சொன்னால் இந்த நால்வரும்



பதவியில் இருந்து ஓய்வு பெற்றபிறகே, இவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. உடனடியாக அந்த நான்கு பேரும் மத்திய நிர்வாக மன்றத்தில் மேற்முறையீடு செய்தனர்., ஓய்வுபெற்றபிறகு அவர்களிடம் விளக்கம் கேட்பது முறையற்றது என அது ஆணையிட்டது. இதன்மூலம் மேற்கண்ட அதிகாரிகள் திட்டமிட்டு பாதுகாக்கப்பட்டனர். இதன் பின்னணியில் இருந்த சூத்திரதாரிகள் யார்? இந்தக் கேள்விக்கு இதுவரை விடையளிக்கப்படவில்லை.

2.ராஜீவ் காந்தியின் உயிருக்கு ஆபத்து வரக்கூடும் என்பதை முன்கூட்டியே உணர்ந்து எச்சரிக்கை செய்திருந்தார் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசர் அராபத். கொலை நடப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பே யாசர் அராபத்தின் பிரதிநிதி ராஜீவைச் சந்தித்து சுட்டிக்காட்டி எச்சரித்தார். ஆனால், புலன்விசாரணைக்குழு யாசர் அராபத்தைச் சந்தித்து எந்த அடிப்படையில் அவர் எச்சரிக்கை செய்தார் என இறுதிவரை விசாரிக்கவேயில்லை. இது ஏன்?

3. ராஜீவ் கொலைப் பின்னணி குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட நிதிபதி ஜெயின் கமிசன் முன் ஆஜராகும்படி தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி, ம.தி.மு.க பொதுச்செயலாளர் கைகோ, கோவை குராமகிருட்டிணன் ஆகியோர் அழைக்கப்பட்டனர். ஆனால், ஜெயின் கமிசன் தனது இடைக்கால அறிக்கையை அளித்தபிறகு இவர்களை கமிசன் அழைத்தது என்பது மட்டுமல்ல, இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணை மட்டும் இரகசிய விசாரணையாக நடத்தப்பட்டது. ஏனெனில் இந்த நால்வரும் புலிகளின் ஆதரவாளர்கள். எனவே, இவர்கள் கூறும் தகவல்கள் வெளியில் தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக இரகசிய விசாரணை என்று திட்டமிட்டுச் செய்தார்கள்.

4. இந்திராகாந்தி கொலை குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட தக்கர் கமிசன் தனது அறிக்கையில் இந்திரா கொலையில் அவர்களது இல்லத்துக்குள்ளேயே சதிகள் உருவாக்கப்பட்டன. இக்கொலையில் இந்திராவின் தனி உதவியாளர் ஆர். கே. தவான் மீது சந்தேகம் எழுகிறது. இவரையும் விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது. ஆனால், தவான் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது ஏன்? இந்திராவின் அலுவலகத்தில் சாதாரண வேலையில் இருந்த ஆர்.கே. தவான் இந்திராவின் மறைவுக்குப் பிறகு காங்கிரஸ் தலைவராக திடீரென்று உயர்ந்தது எப்படி? சீதாராம் கேசரி காங்கிரஸ் தலைவராக இருந்த போது காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகவும் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராகவும் இவர் நியமிக்கப்பட்டார். 1998-ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் டில்லி தொகுதி ஒன்றில் போட்டியிடுவாதற்குக் காங்கிரஸ் வேட்பாளராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த அளவுக்கு அவர் செல்வாக்குப் பெற்றதற்கு யார் காரணம்? சோனியாவின் தயவினால்தான் இவருக்குப் பெரும் பதவிகள் கிடைத்தன. தனது மாமியின் படுகொலையில் சம்பந்தப்பட்டவர் என்று குற்றம் சாட்டப்பட்டவருக்கு சோனியா உதவி செய்ததின் மர்மம் என்ன?

இந்திராவின் இல்லத்திற்குள்ளேயே சதிகள் உருவாக்கப்பட்டன என தக்கர் கமிசன் சாட்டிய குற்றச்சாட்டின் பின்னணி என்ன? இந்திரா குடும்பத்தைச் சேர்ந்த சிலரே இக்கொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது அதன் பொருள். இந்திரா குடும்பத்தில் ராஜீவ்காந்தி, சோனியா, சஞ்சய் காந்தியின் மனைவியான மேனகா ஆகிய மூவரும் இருந்தனர். இந்திரா உயிரோடு இருந்த காலத்திலேயே அவருடைய பெறுப்புக்குஆளாகிமேனகா வெளியேற்றப்பட்டார். எஞ்சியுள்ள ராஜீவ்காந்தி, சோனியா ஆகிய இருவரோ, இருவரில் ஒருவரோ இந்தச் சதியில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அப்படிச் சம்பந்தப்பட்டவர் யார் என்பது? ஆர்.கே. தவானுக்கு முழுமையாக தெரிந்திருக்க வேண்டும். அல்லது இந்தச் சூழ்ச்சியில் அவருக்கும்பங்குஇருக்க வேண்டும்? கொலைச்சதியில் குற்றஞ்சாட்டப்பட்டவர் அதிலிருந்து மீளுவதற்கும், காங்கிரஸ் கட்சியில் பெரும் பதவிகளை அடுக்கடுக்காக வழங்கியும் உதவ வேண்டிய கட்டாயம் என்ன? உதவாவிட்டால் சூழ்ச்சிகள் அம்பலமாகிவிடும் என்ற அச்சம் காரணமா? இந்தக் கேள்விகளுக்கு இதுவரையில் விடையில்லை.

5. பிரதமர் நரசிம்மாவின் அலுவலகத்திலிருந்து முக்கியமான கோப்புகள் மறைக்கப்பட்டு அழிக்கப்பட்டன என புதுடில்லியில் இருந்து வெளிவரும் அவுட்லுக் வார ஏடு (24.11.97) ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியது. காணாமல்போன கோப்புகளில் என்ன இருந்தது? ராஜீவ் கொலை நடந்த அன்று சந்திரசாமியும் சுப்ரமணியசாமியும் எங்கே போனார்கள்? என்ன செய்தார்கள்? என்ற விபரங்கள் இருந்தன. கொலையாளிகளுக்குத் தேவையான பணத்தை சந்திரசாமியே கொடுத்தார் என்பதற்கான ஆவணங்கள் இருந்தன என அவுட்லுக் ஏடு குற்றஞ்சாட்டியது. இதற்கு அரசுத்தரப்பில் இதுவரை எவ்வித மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை. இது ஏன்?

6. திருப்பெரும்புதூர்க் கூட்டத்திற்கு ராஜீவ் காந்தியை கட்டாயப்படுத்தி வரவழைத்த மரகதம சந்திரசேகர்குறித்து பல புகார்கள் எழுந்தன. எத்தகைய சூழலில் ராஜீவை இக்கூட்டத்திற்கு அவர் வரவழைத்தார் என்பது குறித்தோ அல்லது இந்தப் படுகொலை குறித்தோ மரகதம் சந்திரசேகரிடம் இதுவரை சிறப்புப் புலனாய்வு குழு விசாரணை நடத்தாதது ஏன்?

7. இலங்கை அதிபராக இருந்த பிரேமதாசவுக்கு ராஜீவ் கொலை வழக்கில் பங்கு இருக்கலாம் என்ற குற்றச்சாட்டு எழுந்தபோது இந்தக் கோணத்தில் புலன்விசாரணை நடத்தப்படாதது ஏன்? என்ற கேள்வி எழுகிறது.

8. ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தொடர்பாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட சி.பி.ஐ. அதிகாரியான ஸ்ரீகுமார் என்பவர் லண்டன் வழியாக இந்தியா திரும்பும்போது லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் இந்த வழக்குத் தொடர்பான கோப்புகள் அடங்கிய அவரது கைப்பெட்டி காணாமல் போய்விட்டதாக அந்த விமானநிலைய காவல் நிலையத்தில் ஒரு புகாரைப் பதிவுசெய்துவிட்டு இந்தியா திரும்பிவிட்டார். முக்கியக்கோப்புகளைத் தொலைத்த அந்த அதிகாரி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? காணாமல்போன கோப்புக்களை திரும்பப்பெற ஏன் மேற்கொண்டு முயற்சிகள் எடுக்கப்படவில்லை? இந்தக் கேள்விகளுக்கு இதுவரை விடையில்லை.

இதுபோன்ற பல உண்மையான சந்தேகங்களுக்கு அரசு தரப்பிலிருந்தோ அல்லது சி.பி.ஐ. தரப்பிலிருந்தோ எத்தகைய விளக்கமும் அளிக்கப்படவில்லை. புலன்விசாரணையின் தொடக்கக் கட்டத்திலிருந்தே விடுதலைப் புலிகள்தான் இந்தக் கொலையைச் செய்தவர்கள் என தீர்மானித்துக் கொண்டு அந்த அடிப்படையில் விசாரணையும், பிறகு வழக்கு நடத்தப்பட்டதே தவிர உண்மையை அறியும் நோக்கத்தில் நடத்தப்படவில்லை.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் தடா நீதிமன்றத்தில் அவர்களது வழக்கறிஞர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு சரியான பதில் கூற முடியாமல் சி.பி.ஐ. தரப்பு திணறிய விவரங்கள் வெளிவராமல் மறைக்கப்பட்டன. இதற்காகத்தான் இந்த விசாரணை இரகசியமாக நடத்தப்பட்டது.

26 பேர்களில் வழக்கை உச்சநீதிமன்றம் எடுத்துச் சென்று நடத்திய குழுவின் தலைவர் என்ற முறையில் நான் இதைக் கூறுகிறேன். தடாச் சட்டத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது செல்லாது என எங்கள் தரப்பு வழக்கறிஞர் என். நடராஜன் வாதாடியபோது 3 நீதிபதிகளும் திகைப்புடன் அவர் கூறியத்தற்குச் செவிமடுத்தார்கள். சி.பி.ஐ. தரப்போ பதறியது. இறுதியாக எங்கள் வழக்கறிஞர்கள் வாதம் வென்றது தடா சட்டத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது செல்லாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் 19 பேரை குற்றம் அற்றவர்கள் என விடுதலை செய்தது.

அப்படியானால் தடா சட்டத்தின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் செல்லாததுதானே. அப்படிப் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் தானே மூவர் இன்னமும் தூக்கு மேடையின் நிழலில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மேலே நான் குறிப்பிட்ட கேள்விக்குரிய விடைகள் முழுமையாக வெளிவந்தால் இந்த மூவரும் இன்னும் ஆயுள்தண்டனை பெற்றிருக்கிற நான்கு பேரும் குற்றம் அற்றவர்களாக வெளி வரத்தானே செய்வார்கள்.

சி.பி.ஐ. புலன் விசாரணைக் குழுவின் தலைமை அதிகாரியாக செயற்பட்ட ராகோத்தமன் எழுதிய நூலில் புலன்விசாரணை உண்மையாகவும் முழுமையாகவும் நடைபெறவில்லை என ஒப்புக்கொண்டுள்ளாரே? அதற்கு முன்னாள் அதே புலன் விசாரணைக் குழுவில் ஆய்வாளராகப் பணியாற்றிய மோகன்ராஜ் பல உண்மைகள் மறைக்கப்பட்டுவிட்டன என பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டிவிட்டு தனது பதவியில் இருந்து விலகினாரே? ஏன்? அடுக்கடுக்கான இந்த வினாக்களுக்கு இதுவரை விடையில்லை.

மாணவர் காங்கிரசின் துடிப்புமிக்க இளைஞராக வேலுச்சாமி இயங்கிய காலத்திலிருந்து நான் அவரை அறிவேன். தலைவர் காமராசர் மீது அளவற்ற பக்தி கொண்டு அவரது தொண்டராக அன்றும் இன்றும் விளங்கி வருகிறார். அதனால்தான் உண்மைக்காக போராடும் துணிவும் சத்திய ஆவேசமும் அவரிடம் குடி கொண்டிருக்கின்றன. இந்த உணர்வுகளால் உந்தித் தள்ளப்பட்டு, தான் அறிந்த உண்மைகளை இந்நூலில் பதிவு செய்திருக்கிறார். இதற்காக அவரை மனமாறப் பாராட்டுகிறேன்.

சந்திரசாமிக்கும் சுப்பிரமணியசாமிக்கும் ராஜீவ் படுகொலையில் நிச்சியமாக பங்கு உண்டு என்பதை பல்லாண்டு காலமாக ஆதாரப்பூர்வமாக எடுத்துக்காட்டிவரும் நண்பர் வேலுசாமியின் இந்நூல் **திறவாத விழிகளையும் திறக்க வைக்கும் சிந்திக்காதவர்களையும் சிந்திக்கவைக்கும்** என நம்புகிறோம்.



பழ.நெடுமாறன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழின் வீதி அபிவிருத்திப்பணிகள் திருப்திகரமாக அமையவில்லை

## மக்கள் வீதியில் இறங்கி போராட வேண்டிவரும் என்கிறார் அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்திப் பணிகள் திருப்திகரமாக இல்லை. உயிர் ஆபத்தினை ஏற்படுத்தக் கூடியவாறு முன்னெடுக்கப்படும் வீதி அபிவிருத்திப் பணிகளை எதிர்த்து மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிவரும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

வீதி அபிவிருத்திப் பணிகளின் போது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மாநகர சபை மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு போதுமான நிதி வழங்கப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறை இல்லை. ஆனால், அபிவிருத்திப் பணிகளைத் திட்டமிட்டு செய்வதில் தான் பிரச்சினையுள்ளது.

குறிப்பாக வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு பல ஆயிரம் மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் செலவிடப்படவுள்ளது. அத்தோடு குடாநாட்டில் வீதிகள் மிகவும் உயரமாக போடப்பட்டு வருகின்றமையினால் மழை வெள்ளம் குடியிருப்புக்களை நோக்கி செல்கிறது. எனவே, உரியமுறையில் வடிகான்களும் திருத்தப்பட வேண்டும்.

மேலும் வீதிப்புனரமைப்பு பணிகளில் உள்ளூராட்சி சபைகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிதியினைப் பெற்று வீதிகளைச் செப்பனிட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன்போது வீதி அகலிப்பு பணியினால் ஏற்பட்ட நஷ்ட ஈட்டுப் பணம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை என யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரன் குற்றம் சாட்டினார். அத்தோடு எந்தவித முன்னறிவித்தலும் இன்றி வீதிகள் மூடப்படுவதாகவும் வீதிப் புனரமைப்பு பணிக்காக வெட்



டப்படும் குழிகள், மதகுகள் என்பன உயிராபத்தினை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் வீதிகளில் வெட்டப்படும் குழிகள், மதகுகள் என்பன தொடர்பில் அபாய விளக்குகளை ஒளிரவிட்டு மக்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் எனவும் இதனைச் செய்யத் தவறும் ஒப்பந்தகாரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து உரையாற்றிய அரசாங்க அதிபர், வீதித் திருத்தப்பணிகளின் போது இரவு வேளைகளில் வீதிச் சமிக்ஞைகள், எச்சரிக்கை விளக்குகள் ஒளிர விடப்பட வேண்டும். அவ்வாறு வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் ஒப்பந்த நிறுவனங்கள் செய்யத் தவறினால் மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டி ஏற்படும் என்றார்.

மேலும் வடக்கில் வீதி அபிவிருத்திப் பணிகள் மிகவும் வேகமாக இடம்பெற்று வருவது வரவேற்கக்கூடியது. இதன்போது உரையாற்றிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட திட்டப்பணிப்பாளர் மோஷல் மரியதாஸ் மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியதோடு ஏ- 9 பிரதான வீதி புனரமைப்பு பணிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்குள் நிறைவு பெறுவதுடன் வடக்கின் வீதி புனரமைப்பு பணிகள் அனைத்தும் ஜூன் மாதத்திற்குள் முடிவடையும் எனவும் வடக்கில் அதிகமான வீதிகள் இலங்கை, சீனா அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வீதி அபிவிருத்திப் பணிகள் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் முடிப்பதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அடுத்த வருடம் நடுப்பகுதிக்குள் அனைத்து வேலைப்பாடுகளும் நிறைவு பெறும் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், சனசமூக நிலைய தலைவர்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# அம்பாந்தோட்டையில் கடும் மழை பொழிகிறது

## இருவர் பலி: ஆயிரத்து 200 பேர் இடப்பெயர்வு

தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் செவ்வாய்க்கிழமை இரவு பெய்த அடைமழையினால் இருவர் உயிரிழந்திருப்பதுடன் 240 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 200 பேர் தமது வீடுகளிலிருந்து இடம் பெயர்ந்திருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் சரத் லால் குமரா தெரிவித்தார்.

இதேவேளை, பலத்த காற்றின் காரணமாக 13 வீடுகள் முழுமையாகவும் 23 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களிலேயே அண்மையில் அதிக மழை பெய்துள்ளது. இதன்போது அம்பாந்தோட்டையில் அதிக மழை காரணமாக மதில் உடைந்து விழுந்ததில் ஒருவரும் இரத்தினபுரி மாவட்டத்தின் கஹவத்தை பிரதேசத்தில் மண் சரிவின் காரணமாக ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

சீரற்ற காலநிலை தொடரும் நிலையில் இன்னும் சில தினங்களுக்கு சப்ரகமுவ தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்யுமென வானிலை அவதான நிலையம் தெரிவித்தது. (அ-2)

# நேர்முகப்பரீட்சையில் அதிபர்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளது

## பாதிக்கப்பட்ட அதிபர்கள் விசனம்

(பூந்தோட்டம்)

கடமை நிறைவேற்று அதிபர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக வவுனியா வடக்கு வலய கடமை நிறைவேற்று அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பல ஆண்டுகளாக யுத்த சூழ்நிலையிலும் வவுனியா வடக்கு வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு தற்போது கல்வி அமைச்சினால் நடத்தப்படவுள்ள அதிபர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட அதிபர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வவுனியா வடக்கு வலய அலுவலக அதிகாரிகளுடனும் வடமாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகளுடனும் தாம் தொடர்பு கொண்டு கேட்டபோதிலும் சாதகமான பதிலெதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்த அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளால் சுமார் 40 அதிபர்கள் வவுனியா வடக்கு வலயத்தில் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, இவ்விடயம் தொடர்பாக வடமாகாண கல்வித் திணைக்களத்திற்கு தாம் தமது பெயர்ப்பட்டியலை வழங்கியிருந்ததாகவும் எவ்வாறான காரணங்களால் அவர்களுக்கான அழைப்பு வரவில்லை என்பது தெரியவில்லை எனவும் தெரிவித்த அவர், அது தொடர்பில் தான் வடமாகாண கல்வித்திணைக்களத்துடனும் கல்வி அமைச்சுடனும் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அந்த வகையில் வவுனியா வடக்கு அதிபர்களின் பெயர்ப்பட்டியல் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தான் அறிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வரவில்லை என தெரிவிப்பவர்கள் அது தொடர்பிலான மேன்முறையீடுகளை பெற்று அனுப்புமாறும் [illegible] வும் தெரிவித்தார். [illegible]

# அரசியலமைப்பை பாதுகாப்பது மக்களின் கடமை- ஜயதிலக்க

சட்டத்துறையில் காலத்திற்கு காலம் பூகற்பவியல் தொடர்பிலும் சமூக செயற்பாட்டின் அடிப்படையிலும் மாற்றமேற்படுகிறது. இதனை சட்ட சித்தாந்தத்தில் பல்வேறு வகையில் அடையாளம் காணக்கூடியதாக இருக்கும். சட்டக் கல்லூரிகளில் சொக்கிரட்டீஸ், கால்மாக்ஸ் போன்ற சித்தாந்தவாதிகளின் சிந்தனைக் கருத்துக்கள் கற்பிக்கப்படுகின்றபோதிலும் இவை இன்று மனித சமூகத்தில் செயல் இழந்திருக்கின்றன என்று நீதியரசர் ஜெயதிலக்க சுட்டிக் காட்டினார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் நீதியரசர் பீ.டபிள்யூ.டி.சி. ஜெயதிலக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த 14 ஆம் திகதி உரை நிகழ்த்தினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தாம் ஒரு சட்டத்துறை மாணவனாக இருந்த போது சட்ட விஞ்ஞானத்துறையில் சட்ட [illegible] அதிக ஆர்வம் கொண்டி[illegible] இதுவே சட்டத்தை உருவாக்குவதற்கு அடித்தளமாக அமைந்ததென்றும் சுட்டிக்காட்டினார்.

சட்டத்தை பொதுவாக பார்க்குமிடத்து அதன் அடிப்படை சித்தாந்தமாக விளங்குவது ஒரு தேசத்தின் அரசியல் சாசனமாகும். எனவே, நாம் அனைவரும் அரசியல் சாசனத்தை பேணிப்பாதுகாக்கும் கடப்பாட்டினைக் கொண்டுள்ளோம். சமூகத்தின் தேவைகளை பேணிப் பாதுகாப்பதற்காகவே சட்டங்கள் இயற்றப்படுகின்றன என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

சட்டம் கூடிய வரை முரண்பாடுகளை குறைப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டுமென்று தெரிவித்த அவர் சட்டத்திற்கு யதார்த்தபூர்வமாக விளக்கமளித்து தீர்மானம் எடுப்பது அவசியமென்றும் கூறினார்.

பொன்னான விதிமுறை என்ற சட்டப்பதத்திற்கு வியாக்கியானம் அளிப்பதாயின் அது சட்டத்திற்காக அல்ல சமூகத்தின் மேம்பாட்டுக்காக என்றே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத்திட்டம் 2013 ஒரே பார்வையில்



13

37 ஆராய்ச்சி தொழில்நுட்பம் மற்றும் அபிவிருத்தி

37.1 கௌரவ சபாநாயகர் அவர்களே,

அரசாங்க ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் அதனோடு தொடர்பான பணிகளில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்களின் நேரடியான செலவீனங்களுக்கான ரூபா 9 பில்லியனை வழங்குவதற்கு 2013 வரவு செலவுத்திட்டம் ஏற்பாடு செய்கின்றது. 2011 வரவு செலவுத்திட்டத்தில் பல்கலைக்கழக பதவியினர் மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற அரசாங்கத்துறை உயர் பதவியினருக்கு ஆராய்ச்சி கொடுப்பனவுகளை வழங்குவதற்காக திட்டத்தினை நான் செயற்படுத்தினேன். 2013 வரவு செலவுத்திட்டத்தில் அரசாங்க ஆராய்சி நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சியில் தனியார் துறைக்கான நிதியத்திற்காக 3 மடங்கு கழிப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை வரிச் சட்டங்களின் ஏற்பாடுகளில் நான் அறிமுகப்படுத்தினேன். நாட்டில் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்தில் ஈடுபடுகின்ற அனைத்து தரப்பினராலும் காட்டப்படுகின்ற ஆர்வத்தை இட்டு நான் பெரிதும் பெருமிதமடைகின்றேன்.

37.2 எமது மருத்துவ தொழில்புரிநர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஏறக்குறைய 300 புதிய ஆராய்ச்சி முன்னெடுப்புக்கள் மருத்துவ விஞ்ஞானம் மற்றும் சுகாதார நிர்வாகத்தில் விரிந்த கண்ணோட்டத்தில் நோக்கப்பட்டிருப்பதுடன் அவ்வாறான கண்டுபிடிப்புக்கள் சர்வதேச மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பிரபலமான மருத்துவ சஞ்சிகைகள் பலவற்றிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அரசாங்க ஆராய்ச்சி நிறுவனங்களின் விஞ்ஞான ஆராய்ச்சிகள் சர்வதேச கவனத்தினை ஈர்த்த 500 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கருத்திட்டங்களாக காணப்படுகின்றன.

உணவு, தொழில்நுட்பம், பாற்பொருள் பண்ணை மற்றும் விலங்கு வளர்ப்பு, நீரியல், நனொ தொழில்நுட்பம், விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள், டெங்கு கட்டுப்பாடு, தகவல் தொழில்நுட்பம், சிகிச்சை ஆராய்ச்சி, புடைவைத் தொழில்நுட்பம், புதுப்பிக்கக்கூடிய சக்தி, சேதன பொருள் உற்பத்திகள் போன்ற தேசிய அபிவிருத்திக்கு பெறுமதி சேர்க்கக் கூடிய பல துறைகளையும் உள்ளடக்கியதாக எமது பல்கலைக்கழக கல்வியியலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முன்னெடுப்புக்களின் மூலம் நான் நம்பிக்கையடைந்துள்ளேன். எமது விஞ்ஞானிகளுக்கு மத்தியில் ஆராய்சிசி ஆர்வத்தினை துரிதப்படுத்துவதற்காக வேண்டிய எமது பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அத்தகைய ஏதேனும் ஆராய்ச்சி செலவினத்திற்கு நிதியளிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். எனவே, தற்பொழுது தேசிய ஆராய்ச்சி பேரவைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 500 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களில் தனியார் துறைஈடுபாட்டினை ஊக்குவிப்பதற்காக ஆய்வு கூட வசதிகளின் அபிவிருத்தி மற்றும் தேவையான உபகரணங்கள் மீதான மூலதனச் செலவீனங்களுக்கான தேய்வுத் தொகையினையும் ஆராய்ச்சி செலவீனங்களை 3 மடங்காக குறைப்பதற்கான மானியத்தினை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

38 அறிவு சேவைகள் கைத்தொழில்

38.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாடு கடந்த வருடங்களில் அறிவு சேவை கைத்தொழில் துறையில் வளர்ச்சியினை கண்டு வருகின்றது. இதில் பல்வேறு பட்ட உயர் தொழில்புரிநர்கள் ஈடுபட்டுள்ளனர். தகவல் தெழில்நுட்பம், வியாபார செயன்முறை வெளியார் சேவைகள் மற்றும் அறிவு செயன்முறை வெளியார் சேவைகளை உள்ளடக்கிய இக்கைத்தொழில் துறையானது சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற சேவை வழங்குநர்களை எமது நாட்டின்பால் கவர்ந்திழுக்கச் செய்துள்ளது. பெறும் எண்ணிக்கையிலான உள்நாட்டுக் கம்பனிகள் இத்துறையுடன் இணைந்து செயற்படுகின்றன. தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாக கொண்ட ஆராய்ச்சி முன்னெடுப்புகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. ஏறக்குறைய 65 ஆயிரம் ஊழியர்களை கொண்ட இத்துறையானது 400 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை வெளிநாட்டுச் செலாவணியாகச் சம்பாதிக்கின்றது. அடுத்த மூன்று வருடங்களின் போது இத்துறையினை 150 ஆயிரம் நேரடி ஊழியர்களை கொண்ட பில்லியன் டொலர் கைத்தொழில் ஒன்றாக மேம்படுத்துவது எமது நோக்கமாகும். அரசாங்கம் அம்பாந்தோட்டையில் ஏற்கனவே தகவல் தொழில்நுட்ப நிலையமொன்றினை உருவாக்கியுள்ளது.

38.2 தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணைந்த சேவைகள் உயர்ந்த சம்பளங்களையும் உயர் தொழில்நுட்ப சேவைகளையும் கவருகின்றன என்ற வகையில் அவர்களது ஆகக் கூடிய ஆளுக்குரிய வருமான வரி வீதத்தினை 16 சதவீதமாக வரையறுப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். புரோட்பேண்ட் வசதிகளில் செலவீனத்தை குறைப்பதற்கு இணையத் தளங்களுக்கு ஏற்புடையதான தொலைத் தொடர்பு அறவீட்டினை 20 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக குறைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். தக வல் தொழில்நுட்பம், வியாபார வெளியார் செயன்முறை என்பவற்றில் தரச்சான்றிதழ் மற்றும் பயிற்சியினை ஊக்குவிப்பதற்காக தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையத்திற்கு ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடொன்று ஏற்பாடு செய்யப்படும். தகவல் தொழில்நுட்ப வசதிகளை பெற்றுக் கொள்வதற்கான விசேட கருத்திட்டமொன்றாக ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் நெனசெல நிலையங்களை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். அவ்வாறான நிலையங்கள், கைவிடப்பட்ட பாடசாலைகள் மற்றும் ஏனைய பொதுக் கட்டடங்கள் புனரமைப்பு செய்வதன் மூலம் உருவாக்கப்படும். இந்நிலையங்கள் தாய், சேய் போசாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள், சிறந்த விவசாய நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப மாற்றல்கள் போன்ற சமூக ஈடுபாடுகளை கொண்ட ஏனைய கல்வி வசதிகளையும் கொண்டிருக்கும். வறுமை தணிப்பு முன்னெடுப்புக்காக முன்மொழியப்பட்டதற்கு சமாந்தரமாக இம்முன்னெடுப்புக்களையும் செயற்படுத்துவதற்கு ரூபா 750 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

39 ஊடகவியலாளர்கள் மற்றும் கலைஞர்கள்

39.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, முன்னைய வரவு செலவுத்திட்டத்தில் எனது முன்மொழிவுகளை தொடர்ந்து ஊடகவியலாளர்கள் மற்றும் கலைஞர்களுக்கு அவர்களது சமூகப் பங்களிப்பினை பாராட்டும் வகையில் நீண்டகால கடன் அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு வசதியளிப்பதற்காக புதிய கடன்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முதலாவது கட்டமாக 150 ஊடகவியலாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் அத்தகைய வசதி ஏற்பாடு செய்யப்பட்டது. அடுத்த வருடத்தின் போது இந்நிகழ்ச்சித் திட்டத்தினை ஏறக்குறைய ஆயிரம் பேருக்கு வசதிகளை வழங்கும் வகையில் விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முழு வட்டிச் செலவீனத்திற்கும் நிதியளிப்பதாக ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

40 வெளிநாட்டு வேலைவாய்ப்பும் அவர்களது நலன்புரியும்.

40.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, வெளிநாட்டு நாணயச் செலாவணி வருமானமாக ஏறக்குறைய 6 ஆயிரம் மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை பங்களிப்புச் செய்யும் வெளிநாட்டு ஊழியர்களின் நலன்புரிக்கு விசேட கவனம் செலுத்துவது அவசியமாகும். இவ்வாறு வெளிநாடுகளிலிருந்து தொழிலை முடித்துக் கொண்டு திரும்புபவர்களுக்கு வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் சமுர்த்தி வங்கியின் மூலம் உத்தரவாதங்களை வழங்குவதன் மூலம் வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். சிறிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் அத்தகைய குறை வருமானம் பெறுபவர்களுக்கு உதவுவதற்காக சமுர்த்தி வங்கி மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கி மூலம் ரூபா 250 ஆயிரம் வரை 10 சதவீத வட்டி அடிப்படையில் கடன் வசதியினை செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். அவர்களது வாழ்க்கைத்தர மட்டத்தினை அதிகரிப்பதற்கும் அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லுகின்ற நாட்டின் சூழலினை குறிப்பாக அறிந்து கொள்வதற்கும் புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில்நுட்பக் கல்லூரிகள் இரண்டினை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இத் தொழில்நுட்பக் கல்லூரிகள் சுற்றுலா, அழகு சாதனங்களை கணக்கீட்டு தொழில்நுட்பங்கள் போன்றவற்றினை அறிந்திருக்கின்ற ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளை கொண்டிருக்கும் இந்த முன்னெடுப்பினை செயற்படுத்துவதற்கு ரூபா 300 மில்லியனை முதலீடு செய்ய நான் முன்மொழிகின்றேன்.

**வெளிநாட்டு நாணயச் செலாவணி வருமானமாக ஏறக்குறைய 6 ஆயிரம் மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை பங்களிப்புச் செய்யும் வெளிநாட்டு ஊழியர்களின் நலன்புரிக்கு விசேட கவனம் செலுத்துவது அவசியமாகும். இவ்வாறு வெளிநாடுகளிலிருந்து தொழிலை முடித்துக் கொண்டு திரும்புபவர்களுக்கு வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் சமுர்த்தி வங்கியின் மூலம் உத்தரவாதங்களை வழங்குவதன் மூலம் வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கு முன்மொழியப்படுகிறது.**

41 மூலதனச் சந்தை அபிவிருத்தி

41.1 இலங்கையின் பங்குச்சந்தை மிகவும் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த 10 மாதங்களின் போது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கு பங்களிப்பு 267 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை விஞ்சியதாக காணப்பட்டது. பல்வேறு புதிய கம்பனிகள் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சந்தை மூலதனமயமாக்கல் 40 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இந்த போக்கினை நிலையாகப் பேணும் வகையில் 2013 டிசெம்பருக்கு முன்னர் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்படவுள்ள புதிய கம்பனிகளுக்கு அடுத்த 3 வருடங்களுக்கு அரைவாசி வரி விடுமுறையினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

41.2 அதேபோன்று மூலதனத்தினை அதிகரிப்பதற்கும் சிறப்பாக தாபிதம்பெற்ற கம்பனிகளும் சந்தையின் ஆழத்தினை விரிவாக்குவதற்கும் மூலதனத்தினை அதிகரிப்பதற்கும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் தமது படுகடனை பட்டியிலிடமுடியும். கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட முறிகள் மற்றும் பங்குலாபங்களில் முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டி வருமானம் மீதான நிறுத்தி வைத்தல் வரியினை விலக்களிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழ்பவர்கள் மற்றும் குறுகிய கால முதலீட்டாளர்களுக்கிடையில் அலகு நம்பிக்கை பொறுப்பினை பிரபல்யப்படுத்தும் வகையில் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கின் ஊடாக அன்றி அலகு நம்பிக்கை பொறுப்புகளில் வெளிநாட்டு நாணயங்களில் நேரடி முதலீட்டினை அனுமதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். அலகு நம்பிக்கை பொறுப்புகளை முகாமை செய்வதை உறுதிப்படுத்துவதற்காக அலகு நம்பிக்கை முகாமைத்துவத்திற்கு ஏற்படையதான வரியினை 10 சதவீதமாக பிரயோகிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். அத்தகைய சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக பகுதியளவு விற்பனை பங்கு மாற்றல்களுக்கான முத்திரைத் தீர்வையினை விலக்களிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

அனைத்து அக்கறை செலுத்துனநர்களுடனும் கலந்துரையாடி தயாரிக்கப்பட்ட மூலதன சந்தை அபிவிருத்திக்கான பெருந்திட்டம் சந்தையில் உற்பத்திகளின் அபிவிருத்திக்கு வசதியளிக்கும் மூலதனச் சந்தையில் அனைத்து அக்கறை செலுத் துநர்களையும் ஈடுபடுத்தும் திட்டமான மூலதன சந்தை அபிவிருத்தித் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி விசேட செயலணியினை நியமிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

41.3 பங்கு தரகர்கள் படுகடன் பங்குச் சந்தை ஒத்துழைப்பில் அவர்களது உட்கட்டமைப்பினை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு ஊக்கமளிக்கப்படுதல் வேண்டுமென்ற வகையில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு கிளை வலையமைப்பு மற்றும் பிற மூலதனப் பொருட்கள் மீதான தேய்வுக்கான கோரிக்கையினை பெற்றுக்கொள்ள அனுமதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் அறவிடப்பட்ட மீள்காப்புறுதி தொகையினை 20 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக அதிகரிப்பதற்கும் இலங்கை காப்புறுதி கைத்தொழிலின் காப்புறுதி தேவைகளை ஈடு செய்வதற்கு தனியான மீள் காப்புறுதி ஒன்றினை உருவாக்கி முழு தொகையினையும் மாற்றுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

42 வெளிநாட்டு செலாவணி முகாமை

42.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, வெளிநாட்டு செலாவணி சம்பாத்தியத்துறையில் வளர்ந்துவரும் உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களின் அதிகரித்த முதலீட்டாளர் நம்பிக்கை அவர்களது நிதி வழங்கல் தேவைப்பாடுகளை சர்வதேச நிதி சந்தைகளிலிருந்து திரட்டிக்கொள்வதற்கான ஆற்றல் மேம்பாடடைந்துள்ளது.

எனவே, அடுத்த 3 வருடங்களின் போது நாணயச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி வருடமொன்றுக்கு 10 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறுவதற்கு கம்பனிகளுக்கு அனுமதி வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். அடுத்த 3 வருடங்களுக்கு நாணயச் செலாவணி கட்டுப் பாட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறாமல் ஒவ்வொரு வருடமும் 50 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறுவதற்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளை அனுமதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வாழ்க்கைத்தரம் வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் மூலம் முன்னேற்றம்

## குழுநிலை விவாதத்தில் அமைச்சர் டக்ளஸ் உரை

12 ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்கள் சமூகமயப்படுத்தப்பட்டமை பெரும் வெற்றியாகும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் வாழ்வின் எழுச்சித் திட்டத்தினூடாக பாரிய முன்னேற்றம் அடைந்து வருகின்றது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் குறுகிய காலத்தினுள் மீள்குடியேற்றப்பட்டனர். அத்தோடு அந்த மக்களின் வாழ்வதாரமும் மேம்படுத்தப்பட்டது.

2013 வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் பல திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 12ஆயிரம் முன்னாள் புலிகள் சமூகமயப்படுத்தியிருப்பது பெரும் வெற்றியாகும்.

திவிநெகும திட்டத்தினூடாக வறுமையை ஒழித்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனூடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிக நன்மை அடைந்துள்ளனர்.

ஜனாதிபதியின் உதவியோ அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் பங்களிப்போ அன்றி இந்த வெற்றிகளை எட்டமுடியாது. பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் துறையினூடாக கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். சர்வதேச சந்தையை இலக்கு வைத்து பல திட்டங்கள் முன்னெடுக்கபபட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அடங்கலான பல அமைச்சுக்களுடன் இணைந்து பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாரம்பரிய கைத்தொழிற் துறையை ஊக்குவிக்க பயிற்சிகள், உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

வடமாகாணத்தில் விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தெங்கு, பனை சார் கைத்தொழில்களை ஊக்குவிக்க நிவாரண உதவிகள் வழங்கி வருகின்றோம். சிறு மத்தியதர கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கவும் மூலப்பொருட்கள் வழங்கவும் சந்தை வாய்ப்பை அதிகரிக்கவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் பனைக் கைத்தொழிலை முன்னேற்றுவதற்காக பனங்கன்றுகளை வழங்கி வருகின்றோம்.

இந்திய உதவியுடன் பனை அபிவிருத்தி நிறுவனத்தை மீள் ஆரம்பிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கின்றேன். வடக்கில் போன்றே சப்ரகமுவ மாகாணத்திலும் பனைக் கைத்தொழிலை முன்னேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. புதிய படைப்புகளை ஊக்குவிக்கவும் புதிய தொழில்நுட்ப வசதிகளை வழங்கவும்200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# எரிபொருள் பற்றாக்குறையால் சீரான போக்குவரத்து இல்லை

## வவுனியா சாலையில் பரிதாபம்

(பூந்தோட்டம்)

எரிபொருள் பற்றாக்குறையின் காரண[illegible] இலங்கை போக்குவரத்து சேவை பேருந்துகள் சீரான முறையில் சேவையில் ஈடுபட முடியாதநிலை காணப்படுவதாக சாலை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

எரிபொருள் பற்றாக்குறை காணப்படுவதன் காரணமாக தினமும் சில சேவைகளை உரியநேர அட்டவணைப்படி மேற்கொள்ள முடியாதுள்ளது. இதனால் பல கிராமப்புற பகுதிகளுக்கான சேவைகளை மேற்கொள்ள முடியாமையினால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எரிபொருள் கையிருப்பு பற்றாக்குறை மற்றும் வெளி இடங்களில் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாமையே இதற்கான காரணமாக அமைகின்றது என தெரிவித்தனர்.

இது தொடர்பாக வவுனியா சாலையின் முகாமையாளர் தெரிவிக்கையில்,

வவுனியாசாலையின் நாளாந்த வருமானம் தற்போது பிராந்திய கணக்கிற்காக யாழ்ப்பாணம் சாலைக்கு செல்கின்றது. தற்போதைய பிராந்திய பணிப்பாளரின் நடைமுறையின் காரணமாக இவ்வாறான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கும் நிதி பற்றாக்குறை காணப்படுவதுடன் நாளாந்த செலவுக்கான நிதி பற்றாக்குறையும் காணப்படுகின்றது. தற்போது சேவையில் ஈடுபட்டு வந்தாலும் நாளையில் இருந்து சேவைகள் முடங்கும் நிலை காணப்படும் எனவும் தெரிவித்திருந்தார். (அ-266)

# எக்ஸ்போ கண்காட்சி வாக்கெடுப்பில் கசகஸ்தானுக்கே ஆதரவளிப்போம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கைக்கும் கசகஸ்தானுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்பட்டு இருபதாண்டுகள் நிறைவாகின்றன. இந்த வேளையில் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் பலமூட்டக் கிடைத்தமை மகிழ்வானது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை- கசகஸ்தான் தலைவர்களுக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்புக்குப் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இருதரப்பு, பலதரப்பு மட்டங்களில் கசகஸ்தானுக்கு இலங்கை வழங்கக்கூடிய அதி உச்ச ஒத்துழைப்பை வழங்குவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

ஜனாதிபதி தொடர்ந்து தெரிவிக்கையில்,

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக நடவடிக்கைகள் 60 வீதம் வளர்ச்சி கண்டுள்ளன. எதிர்காலத்திலும் வர்த்தக உறவுகள் மேலோங்கும்.

லக்ஏரோ எயார் மூலம் நேரடி விமானச் சேவை ஆரம்பமானதை குறித்தும் மகிழ்வு கொள்கிறேன். இரு நாடுகளுக்கும் இடையில் முதலீட்டு நடவடிக்கைகள் இலகுபடுத்தப்படும். இதற்கான இருதரப்பு ஒப்பந்தம் அவசியமாகும்.

பலனுள்ள பல பேச்சுவார்த்தைகளை உங்கள் ஜனாதிபதியுடன் நடத்தினேன். பொருளாதர, தொழில்நுட்பஒத்துழைப்பு, இருமுறைவரி அறவிடுதலைத் தவிர்த்தல், விமான சேவை, விளையாட்டு, இராஜதந்திர நடவடிக்கை, வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்போர் விசா பத்திரம் பெறும் தேவை, அந்நியோன்ய மட்டத்தில் விடுவித்தல் போன்றவை தொடர்பாக நாம் விரைவில் பேச்சுவார்த்தைகளை நடத்துவோம்.

ஆசியான் நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பை பலப்படுத்தி நெருக்கமாக செயற்பட இலங்கை தீர்மானித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவுக்கு நியமனம் பெற்றமை தொடர்பாக மகிழ்வு கொள்கின்றேன். அவ்விடயமாக செயற்பட வாய்ப்பு கிடைக்குமென நம்புகின்றேன்.

எக்ஸ்போ 2012 பொருட்காட்சி தொடர்பாக உபசரணை நாட்டைத் தெரிவதற்காக இவ்வாரத்தில் பாரிசில் வாக்கெடுப்பு நடைபெறும். அப்போது கசகஸ்தானுக்கு ஆதரவாக பெரும் ஆதரவைத் தருவோம்.

உங்கள் நாட்டு கலைஞர்களை விரைவில் இலங்கைக்கு அழைக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். இயன்ற வரை விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி நஸபர்யேவ் அவர்களுக்கு நான் அன்பு அழைப்பு விடுக்கின்றேன். அவரைக் கொழும்பில் வரவேற்க நாம் எதிர்பார்த்துள்ளேன் என ஜனாதிபதி தெரிவித்தார். (அ-2)

# மாங்குள வான் பரப்பில் தாழப்பறக்கிறது விமானம்

## ஓடி ஒளித்தனர் மக்கள்

(மல்லாவி)

மாங்குளத்திற்கு மேலாலும் மல்லாவி வவுனிக்குளம் உட்பட பல கிராமங்களில் வானத்தில் தாழப்பறந்த சுப்பசொனிக் குண்டுவீச்சு விமானத்தின் இரைச்சலையடுத்து மக்கள் பதறியடித்து பதுங்கிய சம்பவம்நேற்று முன்தினம்புதன்கிழமை காலை 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சத்தத்தை மறந்திருந்த எமக்கு நீண்ட இடைவெளிக்கு பின் நவம்பர் 21 மறக்க முடியாத நாளாக அமைந்திருந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

மேலும் வன்னி வான்பரப்பில் விமானப்படையினர் பயிற்சியில் ஈடுபட்டு வருவதாக விமானப்படை பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார். (அ-3-15)


# சங்கிலி அறுத்த நபர் கைது


(பூந்தோட்டம்)

வவுனியா குருமன்காட்டுப்பகுதியில் நடந்து சென்ற பெண்ணிடம் முச்சக்கர வண்டியில் வந்து தங்க சங்கிலியை அறுத்து சென்றவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி சி.ஐ.இந்திரஜித் தெரிவித்தார்.

தங்க சங்கிலியை பறிகொடுத்தவர் பொலிஸில் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் இதனையடுத்து அவரை விளக்கமறியலில் வைத்துள்ளதாகவும் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-9-266)

# துணை நீயே இறைவா..!





**அமரர் கனகசபை சண்முகசுந்தரம்**
*ஸ்தாபகர் : சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்*
தோற்றம்: 03.11.1941

**அமரர் சண்முகசுந்தரம் சிவரூபன்**
*மாணவன்: யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி*
தோற்றம் 18.08.1983

மறைவு: 23.11.1995

| | | | |
|---|---|---|---|
| பதியைப் | பாசமுடை | புத்திரனைப் | பறிகொடுத்து |
| மதியில்லா | வானாய் | பதினேழு | ஆண்டுகள் |
| விதியதன் | வழியென | வீழாது | வாழ்ந்து |
| துதிக்கின்றோம் | இறைவா | துணை நீயே | நமக்கென்று |

'துர்க்கா இல்லம்',
இல.29, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (சி-1592)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நலப்பணி மூலம் ஆன்மீகத்தை பரப்பிய பாபா

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி தென்னிந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தி கிராமத்தில் தந்தை பெத்த வெங்கப்பராஜு ஈஸ்வரம்மா தம்பதியருக்கு குழந்தையாக ரத்னாகர ராஜுக்கள் வம்சத்தில் தோன்றிய இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் சத்ய நாராயண ராஜு.

பாபா பிறந்த தினத்தில் அடுத்த நாளில் புதுச்சேரியின் மகான் ஸ்ரீ அரவிந்தர் தன் தவத்தைக் கலைத்து தனது ஆச்சிரம வாசிகளைப் பார்த்து 'ஸ்ரீ கிருஷ்ணர் பௌதீகமாக இறங்கி வந்துவிட்டார் என்று பிரகடனம் செய்தார். இதைப்பற்றி அவர் மேலும் கூறுகையில். அந்த தெய்வீக சக்தியின் குரலைக் கோடான கோடி மக்கள் கேட்கப்போகிறார்கள் என்றார்.

அன்று திங்கட்கிழமை ஒக்டோபர் 20. 1940. ஒரு கணத்தில் (வயது 14) சத்யநாராயண ராஜு கையிலிருந்த பள்ளிப் புத்தகங்களை ஒதுக்கி போட்டுவிட்டார். தான் இனி (வீடு) திரும்பப் போவதில்லை என்பதையும் பற்றுக்களைத் துறந்ததையும் இந்த ஒரு செய்கை மூலம் தெளிவாகக் காட்டிவிட்டார்.

நான் இனி உங்கள் சத்யா இல்லை. நான்தான் சாயி என்று தமயனாருக்கும் அருகிலிருந்தோருக்கும் பிரகடனப்படுத்தினார்.

20 வயது (இளைஞன்) சத்ய சாயிபாபா தனது தமையனருக்கு ஒரு கடிதம் எழுதினார். ஒரு கடமை இருக்கிறது. மனித இனத்தினர் அனைவரையும் அரவணைத்து அவர்கள் அனைவருக்கும் பிரம்மானந்தம் அளிக்கும் வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும். வழி தவறிப் பிரிந்துபோனவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி திரும்பவும் நல்வழியில் ஈடுபடுத்தி அவர்களுக்கு நல்லன செய்து காப்பாற்றி வழிநடத்தவேண்டும். நான் விரும்பும் ஒன்றைச் செய்து முடிக்கவேண்டும். ஏழைகளின் துயர் துடைத்து அவர்களிடம் இல்லாததை வழங்கவேண்டும்.

பல அரசுகளால் செய்ய இயலாத பல காரியங்களை பாபா செய்து முடித்தது எவ்வாறு? இலவச ஆரோக்கிய கவனிப்பு என்பது பல வளர்ந்த நாடுகளால் எண்ணிக்கூட பார்க்கமுடியாததை பாபா சுலபமாகச்செய்து காட்டியது எவ்வாறு? ஒரு கிராம இளைஞர் தன்னுடைய பாடப் புத்தகத்தை ஒதுக்கித் தள்ளி வீரலாற்று நாயகனாக உயர்ந்தது எவ்வாறு? ஒரே ஒரு எளிமையான விடை மட்டுமே கிடைக்கிறது. பாபா கடைப்பிடித்து ஒழுகிய தன்னலமற்ற தூய அன்பு.

எனக்குப் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றே. வலியும் ஆனந்தமும் ஒன்றே. என்னிடம் கோபம் இல்லை. என்னிடம் இருப்பது ஒன்றே. அது அன்பு. என்னைக் குறை கூறுபவர்களையும் என்னை இழித்துப் பேசுபவர்களையும் நான் நேசிக்கின்றேன். எனக்கு யாரும் எதிரிகள் அல்ல. அனைவரும் என்னைச் சேர்ந்தவர்ளே ஒரு தாய் தன் குழந்தைகளை நேசிப்பதுபோல நானும் நேசிக்கிறேன். எனக்கு ஒரு அம்மாவைப் போல அன்பு செலுத்தத் தெரியாது. ஆயிரம் அம்மாக்களைப் போல மட்டுமே அன்பு செலுத்தத் தெரியும். என் அன்பின் சக்தியால் மட்டுமே மற்றவர்களை சரியான பாதையில் திசை திருப்ப முடிகிறது என்பது பாபாவின் வார்த்தைகள்.

பாபா எடுத்து நடத்திய திட்டங்களுக்கும் மற்ற நிறுவனங்களுக்கும் இடையே இருக்கும் வித்தியாசம் இந்தத் தூய அன்புதான். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட ஸ்ரீ சத்ய சாயி அமைப்பு சேவைகளின் அன்பு கண்ணியத்தில் ஒழுக்கம். விளம்பரம் இல்லாத ஈகை. அகவிலையைக் கடந்த நிவாரணம். பாரபட்சம் இல்லாத உதவி என்பவற்றிற்கு இலக்கணமாக விளங்குகிறது.

விளம்பரம் இல்லாமல் சேவையைச் செய்து வா பலனை எதிர்பார்க்காதே. இதுவே கடவுளுக்கு மிகவும் பிரியமாக இருக்கும். உங்களுக்கு குறைவில்லாத ஆனந்தத்தை அளிப்பார் என்பன பாபாவின் வார்த்தைகள்.

அதனால்தான் உதவிவேண்டி நிற்பவர்களுக்கு உதவும் வாய்ப்புக்களை பாபாவின் பக்தர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். பாபா செய்ததைப் போலவே பாபாவின் தன்னார்வலர்கள் மேற்கொண்டு செயலாற்றும் ஒவ்வொரு பணித் திட்டங்களிலும் நம் அனைவருக்குள்ளும் உறையும் அந்தப் பரம்பொருளுக்கு சேவை செய்வதாகக் கருதியே அவை செய்து நிறைவேற்றப்படுகின்றன.

நம் உள்ளத்திலிருந்து வழிநடத்தும் அந்தப் பரம்பொருளை அறிந்துகொண்டதும் உலகமே ஒரு குடும்பம் என்ற உணர்வுறவு தோன்றிவிடும். பிறகு தெய்வீக அருள் நம்மிடம் பரிபூரணமாகச் சுரந்து நாம் செய்யும் அனைத்துச் செயல்களிலும் பிரதிபலித்து வழிநடத்தும் என்று பாபா சொல்லியிருக்கிறார்.

பேராசை. தன்னலம். அக்கறையின்மை நிறைந்திருக்கும் இன்றைய இவ் உலகத்தில் பாபாவின் வழிகாட்டல்கள் ஒரு கலங்கரை விளக்காக நம்மிடம் நம்பிக்கையை வளர்த்து நடத்துகிறது. அவர் நிறுவியிருக்கும் சேவைத் திட்டங்கள் நல்லனவற்றின் சரணாலயங்களாக பாதுகாப்பு அளிக்கின்றன.

அந்த புட்டபர்த்தி இளைஞனிடம் முன்னோர் சேர்த்து வைத்த லௌகீகச் சொத்துக்கள் ஏதும் இருக்கவில்லை. குடும்பப் பின்னணியும் அதிகாரச் செல்வாக்குடையதாக இல்லை. பயமுறுத்தும் பட்டப்படிப்பு. கல்விப் பட்டங்களும் இருந்திருக்கவில்லை. அவனிடம் சேர்ந்ததெல்லாம் வற்றாத ஊற்றாக அனைவரிடமும் குறிப்பாக ஏழை எளியவர்கள் அநாதைகள் ஒதுக்கப்பட்ட சமூக நிலையில் இருப்பவர்களில் செலுத்தக்கூடிய தூய அன்பு மட்டுமே.

இந்தத் தூய அன்புதான் பல இலட்சக்கணக்கானவர்களை உலகத்தின் மூலை முடுக்குகளிலிருந்து அவர்பால் இழுத்து அவர கிராமத்திலிருந்த சிறிய குடிலுக்கு அழைத்து வந்தது. அவர்களை ஒன்று சேர்த்து சமூகத்திற்கு மிகச் சிறப்பானதை வழங்க வைத்தது.

பற்பல துறைகளைச் சேர்ந்தவர்கள் ஊதியமில்லாமல் பணியாளர்களாக அவர்கள் வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் புட்டபர்த்தி பிரசாந்தி நிலைய ஆச்சிரமத்திலேயே நிரந்தரமாகத் தங்கி பாபாவின் பணிகளில் ஈடுபட்டு ஆச்சிரமத்தை நிர்வாகம் செய்து வருகிறார்கள். பாபாவின் மாணவர்களில் பலர் தேர்ந்த கல்வியறிவு பெற்றவர்கள்.

சத்ய சாயி பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ. மற்றும் எம் டெக் படித்தவர்களும் அடக்கம். இதுபோன்ற சேவைகளில் மனமொப்பி ஈடுபடுகிறார்கள். ஆசிரமத்தை நிர்வாகம் செய்யும் பல முக்கிய பணிகளில் இவர்கள் தன்னலம் பாராது பற்றற்று பக்தர்களுக்கு சேவை புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

பிரசாந்தி நிலைய ஆச்சிரமம் ஒரு தனி உலகம். இந்த உலகத்தில் பாபா தன் பூத உடலுடன் நடமாடி பக்தர்களுக்கு வழிகாட்டி வந்திருக்கிறார். இதுபோன்ற ஆச்சிரமங்களை உலகின் பல நாடுகளில் நிறுவியிருக்கிறார். ஆன்மீகத்தில் ஈடுபட்டிருக்கும் பாபாவின் பக்தர்களுக்கு இணக்கமான ஒரு சூழ்நிலையை உருவாக்கி அவர்கள் தேடலில் பக்தர்கள் முன்னேற்றம் அடைந்து பாபாவின் அருளுரைக்கேற்ப மனித உறவுகளில் சகோதரத்துவமும் கடவுள் தேடலில் தாய் தந்தையரை அடையாளம் காண்பதும் ஆதாரமாக இருந்து வருகிறது.

**ஆர்.ஸ்ரீஸ்கந்தராஜா, யாழ்ப்பாணம்.**




# அன்பின் சக்தியால் மற்றவர்களை வழிநடத்தி வந்த சத்ய சாயி பாபா

உலகெங்கிலும் 178 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்களின் ஆன்மீக தலைவராக விளங்கி அனைத்து தரப்பினரின் நன் மதிப்பைப் பெற்று திகழ்ந்தவர் ஸ்ரீ சத்ய சாயி பாபா.

ஆன்மீகம். கல்வி. சமூக சேவைகள் உள்ளிட்ட பல்வேறு அறப்பணிகளை செய்து அதன்மூலம் ஆன்மீகத்தை மக்களிடையே பரப்பியவர் என்ற பெருமை அவரையே சாரும்.

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தி என்ற கிராமத்தில் பெத்த வெங்கப்பராஜு ஈஸ்வரம்மா தம்பதியினருக்கு குழந்தையாக 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி சாயிபாபா பிறந்தார்.

இவருக்கு சத்ய நாராயணன் ராஜு என பெற்றோர்கள் பெயர் சூட்டினார்கள். 9 ஆம் வகுப்பு வரையே படித்த சத்யநாராயணன் தனது இளம் வயதில் தன்னுடைய சகோதரர் சேஷமா ராஜுவின் உறவுகொண்ட கிராமத்தில் வசித்துள்ளார்கள். 1940 மார்ச் மாதம் 8 ஆம் திகதி அவரை ஒரு தேள் கொட்டிவிட்டது. இதனால் மயக்கம் அடைந்த சத்யா சில நாட்களில் குணம் அடைந்தார்.

ஆனால் அவரது நடவடிக்கைகளில் மாறுதல் காணப்பட்டது. திடீரென சமஸ்கிருத ஸ்லோகங்களைப் பாடினார். ஆனால் அதற்கு முன் அவர் சமஸ்கிருதம் படித்ததில்லை. இதனால் என்னவோ ஏதோ என்று பயந்து போன அவரது பெற்றோர் அவரை டாக்டரிடமும் மந்திரவாதிகளிடமும் சிகிச்சைக்குட்படுத்தினர்.

1940 ஆம் ஆண்டு மே.23 ஆம் திகதி சத்யா தனது வீட்டில் உள்ளவர்களை அழைத்து அவர்களுக்கு பல பொருட்களை மந்திரத்தில் வரவழைத்து கொடுத்தார். அப்போது வீடு திரும்பிய அவரது தந்தை இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து அவரை மிரட்டியபடி 'நீ உண்மையிலே யார்'? என்று கேட்டார்.

இதற்கு சத்யா நான்தான் சாயிபாபா என்றார். அதாவது மராட்டிய மாநிலத்தில் ஷீரடி சாயிபாபா மிக புகழ் பெற்றவராக இருந்தார். அவர் 8 ஆண்டுகளுக்கு முன் இறந்த நிலையில் நான் ஷீரடி சாயிபாபாவின் மறு அவதாரம் என்று சாயிபாபா கூறினார்.

அதுமுதல் சத்யா என்ற பெயர் மறைந்து அவரை 'சாயிபாபா' என்றே எல்லோரும் அழைக்கத் தொடங்கினார்கள்.

அது முதல் அவர் தீவிரமாக ஆன்மீக பணிகளில் இறங்கினார். பல அற்புதங்களை நிகழ்த்தி காட்டியதால் பக்தர்கள் கூட்டம் அவரை சூழ்ந்துகொண்டது.

இதனைத் தொடர்ந்து அவரது பக்தர்கள் 1950 ஆம் ஆண்டு புட்டபர்த்தி கிராமத்தில் பிரசாந்தி நிலையம் என்றதொரு ஆன்மீக மையத்தை நிறுவினார்கள்.

சத்ய சாயிபாபா மற்றும் அவரது பக்தர்கள் நூற்றுக்கணக்கான சமூகசேவை நிறுவனங்களை நடத்தி வருகிறார்கள். கல்வி நிறுவனங்கள். மருத்துவமனைகள். சமூக சேவை நிறுவனங்கள் என பல வழிகளில் இச் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

1981 இல் ஸ்ரீ சத்ய சாயி உயர்கல்விக்கான தனி அமைப்பு புட்டபர்த்தியில் தொடங்கப்பட்டது. மிகப்பெரிய கலையரங்கம். சத்யதர்ம ஸ்தூபி. புகையிரத நிலையம். விமான நிலையம் ஆகியவற்றை பாபா புட்டபர்த்தியில் நிறுவினார்.

1991 இல் 100 ஏக்கர் பரப்பளவில் ரூபா 100 கோடி (இந்திய ரூபா) முதலீட்டில் அதி நவீன மருத்துவமனை பிரசாந்தி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலையில் ஏழைகளுக்கு இருதய அறுவைச்சிகிச்சை உட்பட எல்லா வித நோய்களுக்கும் இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. தினமும் 10 பேருக்கு இலவச இருதய அறுவைச் சிகிச்சை செய்யப்படுகின்றது சாயி பாபா பெயரில் பல்கலைக்கழகங்கள் உலகின் பல பாகங்களில் இயங்குகின்றன.

அவரது ஆன்மீக பணியை பாராட்டி மத்திய அரசு கடந்த 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அவரது பெயரில் தபால் தலை. தபால் உறை என்பன வெளியிட்டு கௌரவித்தது. சாயிபாபாவுக்கு 178 நாடுகளில் பக்தர்கள் இருந்தபோதிலும் இவர் 1968 ஆம் ஆண்டு உகண்டா நாட்டுக்குச் சென்றதுதான் இவரது ஒரே ஒரு வெளிநாட்டு பயணமாக அமைந்தது.

1963 ஆம் ஆண்டு இவருக்கு கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்டு விரைவிலேயே குணமடைந்தார். உடல் நலிவடைந்ததால் 2005 ஆம் ஆண்டு முதல் தள்ளுவண்டியிலேயே பக்தர்கள் முன் வலம் வந்தார்.

1974 ஆம் ஆண்டு குருபூர்ணிமா நிகழ்ச்சியின்போது உரையாற்றியபோது தான் 96 வயது வரை வாழ்வேன் என்று கூறி இந்த அவதாரத்திற்கு பிறகு கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டத்தில் பிரேமசாயி என்ற பெயரில் மீண்டும் அவதரிக்க இருப்பதாகவும் அப்போது அவர் தெரிவித்தார்.

**ப.முகுந்தன், ஆசிரியர்**
**யா/செங்குந்தா இந்துக் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலசாலிகளை பலவீனப்படுத்துவதன் மூலம்
பலவீனர்களை பலசாலியாக்க முடியாது
-ஆபிரகாம் லிங்கன்-

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நாங்கள் அழித்தால் அன்றி உலகம் ஒருபோதும் அழியாது

உலகம் அழியப்போவதான செய்தி இன்றைய பேசுபடுபொருளாக உள்ளது. மாயன் பஞ்சாங்கத்தை அடிப்படையாகக் கொண்ட உலக அழிவுக் கதையில் உண்மையிருக்கிறதோ, இல்லையோ என்பதை எதிர்வரும் டிசம்பர் 21ந் திகதி தெரிந்துகொள்ளலாம்.

இதில் வேடிக்கை என்னவெனில், 2012 டிசம்பர் 21ந் திகதி உலகம் அழியப்போவதான செய்திகளும் படங்களும் அடங்கிய இறுவெட்டுக்களின் விற்பனை யாழ்ப்பாணத்தில் களை கட்டி இருப்பதுதான்.

உலகம் அழியப் போகின்றது என்ற செய்தியை அதனோடு தொடர்புடைய உருவகப் படங்களை தயாரித்து அதன் இறுவெட்டுக்களை விற்பனை செய்கின்றவருக்கு நிச்சயம் தெரியும் இந்த உலகம் அழியப்போவதில்லை என்று.

அத்தகையதொரு நம்பிக்கை அவரிடம் இருப்பதனால்தான் உலக அழிவு பற்றிய சீடியை அவர் அசுர வேகத்தில் விற்பனை செய்து அதன்மூலம் இலாபம் தேடிக்கொள்கிறார்.

டிசம்பர் 21ந் திகதி அழியப்போகின்ற உலகத்தில் இலாபம் ஈட்டி என்ன செய்ய முடியும் என்று ஒரு கணம் நினைத்தாலே போதும். இந்த உலகம் இயங்க மறுத்துவிடும்.

எனவே உலகம் அழியப்போகிறது என்பதற்குள் கூட இலாபம் தேடுகின்ற பகுத்தறிவு மனித சமூகத்திடம் மட்டுமே இருக்கமுடியும்.

உண்மையில் உலகம் அழியப்போகிறது எனக் கூறுவதைவிட உலகம் அழிக்கப்படுகின்றது அல்லது உலகத்தை அழித்துக்கொண்டிருக்கின்றோம் எனக் கூறுவதே பொருத்துடையதாகும்.

உலகம் அழியப்போகிறது என அச்சம் கொள்ளும் நாம், உலகத்தை அழித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்ளாமல் இருப்பதுதான் எங்களிடம் இருக்கக்கூடிய அறியாமையின் உச்சம் எனலாம்.

இலங்கைத் தீவை எடுத்துக்கொண்டால், நாட்டின் எதிர்காலம் பற்றி எவரும் சிந்திப்பதாக இல்லை.

தமக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டில் இருக்கக்கூடிய செல்வத்தை அபகரித்து தமது உரிமையாக்கிக் கொள்கின்றமை இலங்கையை அழிக்கின்ற நடவடிக்கையே.

ஈழத்தமிழ் மக்களை இந்த மண்ணில் வாழவிடாமல் அவர்களை கொன்றொழித்தது உலக அழிவு இல்லையா?

மனித உயிர்களைக் காப்பாற்ற வேண்டி ஐ.நா சபை மௌனமாக இருந்தது உலக அழிவில்லையா?

தமிழக முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி ஆகாரம் உண்டுவிட்டு உண்ணாவிரதம் இருந்ததும், இந்திய மத்திய அரசு எங்களைக் காப்பாற்றுவது போல பாசாங்கு செய்ததும் உலக அழிவுக்கான அடித்தளங்களில்லையா?

ஏன்? எங்களுக்குள் எத்தனை ஊழல்கள். இதுதான் உலக அழிவு.

மாறாக உலகம் ஒருபோதும் தானாக அழியாது; அழியவும் மாட்டாது. நாங்கள் அழித்தால் அன்றி.

### அமைச்சர் யாப்பாவுக்கு டெங்கு

# குற்றவியல் பிரேரணை விசாரணைக்கு வருமா?

(கொழும்பு)

குற்றவியல் பிரேரணை தொடர்பில் நாளை நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் இலங்கையின் பிரதம நீதியரசரை பிரசன்னமாகுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் இன்று குறித்த நிகழ்வுஇடம்பெறுமா? என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

குறித்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவராக இருக்கும் அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பாவுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளமையால் அவர் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் தெரிவுக்குழுவின் உறுப்பினராக உள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தமக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்கமுடியாது என்று அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மறுபுறத்தில் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோருக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளமையால் அவர்கள் தெரிவுக் குழுவுக்கு தலைமை வகிக்க முடியாது.

அத்துடன் அவர்களுக்கு நீதித்துறையில் அனுபவமே அல்லது சட்டத் துறையில் பதவிகளோ இல்லை. எனவே அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்கமுடியாது.

இந்தநிலையில் நாளைய அமர்வின் போது பிரதம நீதியரசரும் பங்கேற்காமல் அவருடைய சட்டத்தரணியே பங்கேற்பார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே ஒரு மாத காலத்துக்குள் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை முடிக்கவேண்டும் என்று அரசாங்கம் காட்டும் முனைப்பு சாத்தியமாகாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

### விரிவுரையாளர்களுக்கு 100நாள் சம்பளம் இல்லை

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கடந்த மூன்று மாதங்களாக மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பு காலத்துக்கான சம்பளத்தை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம் இது தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் திகதி வெளியிடப்பட்ட 890 ஆவது சுற்றறிக்கையின்படி பணிப்பகிஷ்கரிப்பு காலத்துக்கு விரிவுரையாளர்களுக்கான சம்பளம் வழங்கப்படாது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இது தொடர்பில் தாம் விரைவில் கூடி முடிபெடுக்கவுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

### புதுக்குடியிருப்பு பி.செ.மக்களுக்கு

## மீள்குடியமர்வு கொடுப்பனவு

(முல்லைத்தீவு)

யு.என்.எச்.சி.ஆர். இனால் வழங்கப்படும் மீள்குடியேற்றப் பணம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணி வரை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வழங்கப்படவுள்ளது.

இப்பணம் தேவிபுரம்,வள்ளிபுனம், கோம்பாவில், ஆனந்தபுரம், இரணைப்பாலை,மல்லிகைத்தீவு,சுதந்திரபுரம் ஆகிய கிராம மக்களுக்கே வழங்கப்படவுள்ளது.

எனவே, பணத்தைப் பெற வரும் போது அடையாள அட்டை, குடும்ப அட்டை, போருக்கு முன் முல்லைத்தீவில் வசித்ததற்கான ஆவணம் அல்லது நலன்புரி முகாமில் வசித்ததற்கான ஆவணம் என்பவற்றுடன் வருகை தருமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் உள்ள ஏனைய கிராமங்களுக்கு மிக விரைவாக மீள்குடியேற்ற பணம் வழங்கு வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (அ-3-267)

## கொடுப்பனவுச்சிட்டைகளை ஒப்படைக்குமாறு பணிப்பு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த பால், முட்டை விநியோகத்திற்குரிய கொடுப்பனவுகள் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்டுமீளவும் 2013ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பத்துடன் வழங்கப்படவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா அறிவித்துள்ளார்.

எனவே துணுக்காய் வலயத்தின் அனைத்து பாடசாலை அதிபர்களும் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் கணக்குகளை நிறைவுசெய்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் துணுக்காய் கல்விவலயத்தில் கொடுப்பனவுக்குரிய சிட்டைகளை ஒப்படைக்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (அ-3-15)




பக்திவயப்பட்டவருடைய கோலம் தனித்துவமானது. இறைவனையே காணவேண்டும் என்ற இலக்கு அவர்கள் கோலத்தையும் செயற்பாட்டையும் மாற்றிவிடும். கோயில் வழிபாட்டில் ஈடுபட்டு நிற்கும் பக்தர்கள் சிலரைப் பார்க்கும்போது எமக்குப் பைத்தியங்கள்போலத் தென்படலாம். ஆனாலவர்கள் இவ்வுலக நினைப்பை முற்றாகத் துறந்தவர்கள். இறைவனுடைய திருக்கோலம் ஒன்றிலேயே ஈடுபட்டு நிற்பவர். அவர்களுக்குச் சுற்றுச்சூழல் கண்ணில் என்றும் தெரிவதில்லை. அவர்களுடைய விருப்புக்கள் வேறுபட்டவை. மணிவாசகர் அத்தகைய நிலையை ஒரு பாடலில் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

மெய்யடியார்களுக்கு மெய்ப்பொருளாக உள்ள இறைவனை நோக்கி வருமாறு கூறுகிறார்.

அடியேன் நின்னையே வணங்கி நின்புகழ்களையே பாடுவதற்கு அருள் செய்யவேண்டும். அவ்வாறு நின்னை வணங்கிப் புகழ்ந்து பாடி நின்னைக் கண்ணாற் காணும் அவாவினால் உள்ளம் நைந்துநைந்து நெக்கு நெக்கு உருகி நான் ஆனந்தக்கூத்து ஆட நீ அருள்செய்யவேண்டும். மேலும் நாயைப் போன்றவனான நான் நின்னை வணங்கித் திருச்சிற்றம் பலத்தின் கண் ஆனந்தக்கூத்தைச் செய்தருளுகின்ற நின் திருவடி மலர்களைச் சார்ந்து தரிசிக்க அருள் செய்யவேண்டும். நான் நின்னை வணங்கிப் பொய்யாகிய இவ்வுலக வாழ்வினின்றும் நீங்கும்படி அருள் செய்யவேண்டும். எனக்கு வீடுபேற்றையும் தந்தருள வேண்டும்.

மணிவாசகர் திருப்பெருந்துறையில் கண்ட இறைவனை மீண்டும் காண வேண்டுமாயின் ஒரு புதிய வழிபாட்டு நெறியைப் பின்பற்றவேண்டுமென முடிவு செய்கிறார். திருக்கோயில் வழிபாட்டின் மூலம் இறைவனை மீண்டும் அடையலாம் என்று நம்பிக்கையூட்டுகிறார். அந்த வழிபாட்டை எப்படிச் செய்ய வேண்டுமெனவும் வழிகாட்டியுள்ளார். தில்லையிலே திருநடனம் செய்யும் திருவடியை வழிபட்டால் வீடுபேறு கிடைக்குமென உறுதியாக நம்புகிறார். ஆனால் அந்த வழிபாடு பக்திவயப்பட்டதாக இருக்கவேண்டும். இறைவன் புகழை நினைந்து பாடி உள்ளம் உருகி நிற்கவேண்டும். தன்னை மறந்த நிலையில் இறைவன் நினைவில் முற்றாகத் தோய்ந்து ஆனந்தக்கூத்தாட வேண்டும். அவ்வாறு முழுமையான பக்திவயப்பட்டு நிற்கும் போது நினது திருவடியைப் பார்த்து பரவசமடைய வேண்டும். தூக்கிய திருவடியின் அற்புதத்தை மணிவாசகர் அனுபவித்தவர். அவர் பெற்ற திருவடி தீட்சை அனுபவம் மறக்க முடியாதது. இந்த அழகிய திருக்கழல் தானே என்தலைமீது பட்டது என்று நினைந்து உருகிநிற்கிறது. கோவிலில் ஆடற்கோலம் மற்றவருக்கு ஒரு அருட்காட்சி மட்டுமே. ஆனால் அது மணிவாசகருக்கு உண்மையான அருள் அனுபவமாகும். இந்த அனுபவம் எப்போதும் மனதில் நிறைந்திருந்தமையால் தான் தில்லையிலே ஆனந்தக்கூத்தாடும் கழலைச்சென்று வழிபட வேண்டுகிறார். திருப்பெருந்துறையில் அவர் கண்ட திருவடி மெய்யான தோற்றம். அத்தோற்றத்தை மீண்டும் காணவே இறைவன் தனக்கருள வேண்டுகிறார். பாடுதல், ஆடுதல் என்னும் செயற்பாடுகள் வழிபாட்டில் இணைந்திருந்தமைக்கு மணிவாசகர் பாடல் இன்றும் சிறந்ததொரு சான்றாக நின்று நிலவுகிறது.


**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

**பாடவேண்டும் நான்போற்றி நின்னையே**
**பாடி நைந்துநைந்துருகி நெக்குநெக்**
**காடவேண்டும் நான் போற்றி யம்பலத்**
**தாடு நின்கழற் போது நாயினேன்**
**கூடவேண்டும் நான் போற்றி யிப் புழுக்**
**கூடு நீக்கெனைப்போற்றிபொய்யெல்லாம்**
**வீட வேண்டும் நான் போற்றி வீடுதந்**
**தருளு போற்றி நின் மெய்யர் மெய்யனே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை மாணவன் றெனாட் ஜோண்சன் ஜோண் பற்றிக் அண்மையில் நடைபெற்ற மெய்வன்மை போட்டியில் 17 வயதுப் பிரிவு ஈட்டி எறிதல் போட்டியில் கோட்டம், வலயம், மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் தேசிய ரீதியில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் மேசைப்பந்தாட்ட பயிற்றுநர்களுக்கான தரம் 1 இற்கான பயிற்சி முகாம் டிசெம்பர் மாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளது. மேற்படி பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாமில் பங்குபற்ற விரும்புவோர் யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் மோகனுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளன.



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் 2012 ஆம் ஆண்டிற்கான வடமாகாணத்தைச் சேர்ந்த கராத்தே வீரர்களுக்கான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்தில் கராத்தே பயிற்சி பெற்று வரும் மாணவர்கள் இவ் வருடம் நடைபெற்ற வடமாகாணத்திற்கான கராத்தே சுற்றுப் போட்டியில் 32 பதக்கங்களைப் பெற்று முன்னிலை வகிக்கின்றனர். இவர்களுக்கு பயிற்சி வழங்கியவர் சென். சே. விஜயராஜ் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட் போட்டி

இலங்கை பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான பிரிவு III இற்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் எதிர்வரும் சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

# கிளிநொச்சி மாவட்ட கரப்பந்து அடுத்த மாதம்

கிளிநொச்சி மாவட்ட ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டப் போட்டிகள் அடுத்த மாத முதற் பகுதியில் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ள அணிகளை சிறந்த முறையில் தயார்ப்படுத்திக் கொள்ளுமாறும் போட்டிகள் இடம்பெறவுள்ள மைதானங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் துரிதமாக மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை வீழ்த்தி சென். ஜோன்ஸ் கல்லூரி அபார வெற்றி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணிக்கெதிரான போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்சால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஏ அணியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் மோதின.

இப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இனிங்சிற்காக ஆடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 28:1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அபிலால் 17 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். பந்து வீச்சில் சிந்துஜன் 5 விக்கெட்டினையும் கபில்ராஜ் மூன்று விக்கெட்டினையும் கைப்பெற்றினர்.



பதிலுக்கு முதல் இனிங்சிற்காக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 4 விக்கெட்டினை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தனது ஆட்டத்தினை நிறுத்திக் கொண்டது.

இதில் யதுஷன் 51 ஓட்டங்களையும் டினுஷன் 20 ஓட்டங்களையும் கபில்ராஜ் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் தர்சிகன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். 93 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்சிற்காக ஆடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 32 ஓட்டங்களைப் பெற்று இனிங்ஸ்சினால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ரதிஸ்சன் மூன்று ஓட்டங்களையும் அன்பரசன் மூன்று ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சொருபன், யதுஷன் தலா நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிளார்க் இரட்டைச் சதம்: அவுஸ்ரேலியா ஆதிக்கம்



(அடிலெய்ட்)

அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பித்தது.

நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிபில் அவுஸ்திரேலிய அணி பலமான நிலையில் காணப்படுகிறது. அடிலெய்ட் ஓவல் மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி நேற்றைய நாள் முடிபில் 5 விக்கெட்டுக்களை இழந்து 482 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

முதலாவது விக்கெட்டுக்காக 43 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்த அவுஸ்திரேலிய அணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களை பெற்றுத் தடுமாறியது.


ஆனால் 4-வது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த டேவிட் வோர்னர் மற்றும் அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் ஆகியோர் அதிரடியாக ஆடினர். இருவரும் 24.2 ஓவர்களில் 155 ஓட்டங்களைக் குவித்தனர்.

அதன் பின்னர் மைக்கல் கிளார்க், மைக்கல் ஹசி இருவரும் 5 - வது விக்கெட்டுக்காக 48.1 ஓவர்களில் 272 ஓட்டங்களைக் குவித்து அவுஸ்திரேலிய அணியின் ஆதிக்கத்தை உறுதி செய்தனர்.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 243 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 224 ஓட்டங்களையும், டேவிட் வோர்னர் 112 பந்துகளில் 119 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி 137 பந்துகளில் 103 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜக்ஸ் கலிஸ், மோர்னி மோர்கல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், டேல் ஸ்ரெய்ன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் 2-வது நாள் ஆட்டம் இன்றாகும்.

## கிரிக்கெட்டுக்கு வருகிறார் மின்னல் வேக வீரர் போல்ட்




எதிர்வரும் 2016 ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பின்பு கிரிக்கெட் அல்லது கால்பந்து போட்டிகளில் கவனம் செலுத்த உலகின் மின்னல் வேக ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட் முடிபெடுத்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் கூட்ட நாடான ஜமைக்காவில் கிரிக்கெட் விசிறியாக தனது வாழ்க்கையைத் தொடக்கிய உசைன் போல்ட், பின்னர் ஓட்டப்பந்தயத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினார்.

போல்ட், தற்போது 100 , 200 மற்றும் 4X100 மீற்றர் தொடர் ஓட்டம் ஆகியவற்றில் நடப்பு ஒலிம்பிக் சம்பியனாக உள்ளார்.

இவர், எதிர்வரும் 2016-ம் ஆண்டு ரியோடி ஜெனிரோ நகரில் நடக்கும் ஒலிம்பிக் போட்டிக்குப் பின்பு ஓட்டப்பந்தயத்திலிருந்து ஓய்வு பெறப் போவதாகவும், அதன் பின்னர் அவரது கவனம் கிரிக்கெட் அல்லது கால்பந்து பக்கம் திரும்பும் எனவும் கூறப்படுகிறது.

இவர் ஏற்கெனவே கால்பந்து கழக அணியான மான்செஸ்டர் யுனைட்டட் அணியில் இணைய உள்ளார் என்றும் பிக்பாஷ் லீக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க உள்ளார் எனவும் தகவல்கள் வெளியாயின என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹொங்கொங் பட்மிண்டன்
## சாய்னா அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்




ஹொங்கொங் சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாய்னா நெஹ்வால் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஹொங்கொங்கில் உள்ள கவுலூனில் ஹொங்கொங் சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் போட்டி நடைபெற்று வருகிறது.

இதன் மகளிர் ஒற்றையர் பிரிவிற்கான முதல் சுற்று ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சாய்னா நெஹ்வால் இந்தோனேசியாவின் ஏப்ரிலா யஷ்வந்திரியை எதிர் கொண்டார்.

இந்த ஆட்டத்தில் சாய்னா 22-20, 21-8 என்ற செட் கணக்கில் யஷ்வந்திரியை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

## மேற்கிந்திய தீவுகள் சிறந்த அடித்தளம்



பங்களாதேஷ் அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் மேற்கிந்திய தீவுகள் அணி 2 விக்கெட் இழப்பிற்கு 241 ஓட்டத்தினை பெற்றுள்ளது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணத் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது.

ஏற்கெனவே நடைபெற்ற முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற ரீதியில் முன்னிலை வகிக்கின்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அபுல் ஹாசன் சதத்துடன் 387 ஓட்டத்தினை குவித்தது.

நேற்றுத் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய மேற்கந்தியத் தீவுகள் அணி மார்லன் சாமுவேல்ஸின் சதத்துடன் பிராவோவின் அரைச்சதத்துடனும் 2 விக்கெட் இழப்பிற்கு 241 ஓட்டத்தினைப் பெற்றது. போட்டியின் மூன்றாவது நாள் இன்றாகும்.

## ஒரே ஆண்டில் 4 இரட்டை சதம்
## மைக்கல் கிளார்க் சாதனை



ஒரே ஆண்டில் நான்கு முறை இரட்டை சதங்கள் அடித்து சாதனை படைத்துள்ளார் அவுஸ்திரேலியாவின் மைக்கேல் கிளார்க்.

அவுஸ்திரேலியா - தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அடிலெய்டில் நேற்று தொடங்கியது.

முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி நேற்று ஆட்ட நேர முடிபில் 5 விக்கெட் இழப்பிற்கு 482 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

அவுஸ்திரேலியா இந்த இலக்கை அடைவதற்கு அணித்தலைவர் மைக்கேல் கிளார்க்கின் ஆட்டம் முக்கிய பங்கு வகித்தது.

இவர் 226 பந்துகளில் 35 பவுண்டரி, ஒரு சிக்சருடன் இரட்டை சதம் விளாசினார். இதன் மூலம் ஒரே ஆண்டில் 4 முறை இரட்டை சதம் அடித்த முதல் வீரர் என்ற சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்பு பிரிஸ்பேனில் நடந்த தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதல் போட்டியிலும் (259), இந்தியாவுக்கு எதிரான சிட்னியிலும் (329), அடிலெய்டிலும் (210), இரட்டைச் சதம் அடித்துள்ளார்.

இதன் மூலம் டொான் பிராட்மேனின் சாதனையையும் (ஒரே ஆண்டில் 3 இரட்டைச் சதம்) கிளார்க் முறியடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 நவம்பர் மாவீரர் நாள் அன்றே கார்த்திகை விளக்கீடு

## படையினரின் கெடுபிடிகள் அதிகரிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இம்முறை மாவீரர் நாளும், கார்த்திகை விளக்கீடும் ஒரே நாளில் வருவதால் படையினரால் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாக நேரிடும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27-ம் திகதி செவ்வாய்க் கிழமை இந்துக்களின் பண்டிகையான கார்த்திகை விளக்கீடு தீபமேற்றி கொண்டாடப் படவுள்ளது.

அன்றைய தினம் மாலையில் முருகன் ஆலயங்களில் கார்த்திகை தீபங்களை ஏற்றி வழிபாடு நடத்துவது வழக்கம்.

மாவீரர் நாள் நிகழ்வுகளிலும் மாலை 6.07 மணியளவில் விளக்குகளை ஏற்றி மாவீரர்களை நினைவிற் கொள்வது வழக்கமாகும்.

எனினும் வன்னி யுத்தம் முடிவுக்கு வந்த பின் மாவீரர் நாள் நிகழ்வுகள் இலங்கையில் எப்பாகத்திலும் கொண்டாட முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விரு நிகழ்வுகளும் ஒரேநாளில் வருவதால் படையினரின் கண்ணோட்டம் தவறாக அமைந்து பிரச்சினைகளை உருவாக்கிவிடும் என மக்கள் அஞ்சுகின்றனர்.

எனவே இப்பிரச்சினை தொடர்பில் இந்து மதத்தலைவர்கள், படைத்தரப்பு அதிகாரிகளிடம் உரிய முறையில் விளக்கமளிப்பது உகந்தது என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த வருட காலங்களில் யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் கார்த்திகை தீபம் ஏற்றியவர்களுடன் படையினர் முரண்பட்டுக் கொண்டு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-1)

## ஒன்றுகூடல் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய அழகியல் பாட (சங்கீதம், நடனம், சித்திரம், நாடகமும் அரங்கியலும்) ஆசிரியர்களுக்கான அவசர ஒன்றுகூடல் நிகழ்வு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இவ் ஒன்றுகூடல் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந-11)

## நீரில் மூழ்...

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த குழந்தை நேற்று மாலை 3 மணியளவில் வீட்டு முற்றத்திலே விளையாடிக் கொண்டிருந்தது.

வீட்டுக்கு முன்னால் உருவாகியிருந்த நீர் நிரம்பிய பள்ள கிடங்கினுள் குறித்த குழந்தை இறங்கியுள்ளது.

இதன்போது பள்ளத்தில் காணப்பட்ட வடலியினுள் குறித்த குழந்தை சிக்குண்டு மூச்சுத்திணறி சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக இறந்துள்ளது.

நேற்று பெய்த மழை காரணமாக நீர் மட்டமானது அதிகமாக காணப்பட்டதனால் இக்கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவங்களில் மூன்றாவது சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ந-85)

## குடும்பஸ்...

சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான காளிமுத்து முருகையா (வயது-40), அதே இடத்தினைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான தம்பிராசா கோணேஸ்வரன் (வயது 37) என்ற இருவருமே பலியானவர்களாவர்.

இவர்களது சடலம் நேற்றுக்காலை 8 மணியளவில் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பிரேதப்பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-267)

## இலங்கை அரசு மீது...

நல்லிணக்கம், மீள் அபிவிருத்தி, பொறுப்புக்கூறுதல் மற்றும் மனித உரிமைகளை மதித்தல் போன்ற விடயங்கள், போருக்கு பின்னதாக இலங்கை அரசால் முன்னெடுக்கப்படாமல் தொடர்ந்தும் மறுக்கப்படுவதாக அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையால் வெளியான அறிக்கையை மேற்கோள்காட்டி கருத்துக்கூறிய கொர்நேலீ ச்சிசு, இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் அங்கு இடம்பெற்ற மிக மோசமான மனித உரிமை மீறல்களும், அதனால் பொதுமக்கள் அனுபவித்த துன்பங்களும் கொடூரமானவை எனக் குறிப்பிட்டார்.

மேலும், வெளியான அறிக்கையில் தனது தவறை ஐ.நா ஏற்றுக்கொண்டுள்ள போதிலும், மக்கள் மேம்பாட்டிற்கான எந்த ஒரு விடயத்திலும் இலங்கை அரசு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

கனேடியப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர் போன்றோர் தங்களுக்குக் கிடைத்த அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்தி, கனேடிய அரசின் கவலையை இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தி வருகின்றனர். கனேடிய அரசு தொடர்ந்தும் இலங்கை அரசின் மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களில் குரலெழுப்பத் தயங்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை விடயத்தில் கனடா இறுக்கமாகச் செயற்படும் என கனேடிய பாராளுமன்றில் கனடா வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## பதின்மூன்...

களுக்கு இடையில் மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வேறு மாற்று யோசனைகள் முன்வைக்கப்பட வேண்டும்.

மேலும் நாட்டின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் ஊடகங்கள் சரியான செய்திகளை வெளியிட வேண்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## அஸ்வர் எம்.பியின் நட...

வரை வடமாகாண தமிழ் மக்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முழுமையான முறையிலே சேவையாற்றி வருகின்றார். இவரை விமர்சிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உரிமை இல்லை என்பதே எனது கருத்தாகும்.

இன்று வடபகுதி மக்களின் அபிவிருத்தியை பேரினவாதிகளின் மத்தியிலும் கூட நேர்மையான முறையிலே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்துச் செல்கின்றார். இதனை சரவணபவன் எம்.பியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இருப்பினும் வடபகுதி மக்களின் குறைநிறைகளை எடுத்துச் சொல்வதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினருக்கு உரிமை உள்ளது.

அவர்களது நாடாளுமன்ற உரைக்கு பதிலளிப்பதற்கு எவருக்கும் நேரம் ஒதுக்கப் படுகிறது. இருப்பினும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசும் பொழுது அவர்களை இடை மறித்து கேவலமாக பேசுவதை அஸ்வர் எம்.பி. நிறுத்த வேண்டும். அதிகமாக சபா நாயகர் ஆசனத்தில் அமர்ந்து சபையை முன்னெடுத்துச் செல்லும் அஸ்வர் இப்படியான செயல்பாடுகளில் ஈடுபடக் கூடாது.

இவர் எதிர்க்கட்சிக்கு மட்டுமல்ல ஆளும் கட்சியான எங்களுக்கும் ஒரு தொல்லையாக தென்படுகிறார்.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக இவர் செயல்படுகிறதைப்பற்றி நான் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக அநாவசியமான இவரது தலையீடு கேவலத்துக்குரியதாகும். இதன் மூலம் அவர் எவரை திருப்தி செய்து எதனைப் பெற்றுக்கொள்ளப் பார்க்கிறார் என்பது எல்லோருக்குத் தெரியும்.

அரச தரப்பு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவரைப்பற்றி தெரிந்து கொண்டும் பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற நிலையில் உள்ளார்கள்.

இவரது இப்படியான நடவடிக்கைகளை சபாநாயகர் இனியும் அனுமதிப்பது ஜனநாயக விரோத செயலாகும். சகல இன மக்களும் இணைந்த ஐக்கிய இலங்கை என்ற ஜனாதிபதி நிலைப்பாட்டை இவரது நாடாளுமன்ற செயல்பாடுகள் கடுமையாக பாதிக்கின்றது என பிரபா எம்.பி. குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## இலங்கை...

ராஜபக்ஷ கஸகஸ்தான் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் புதிய தலைவர் தெரிவு பற்றி அறிவிக்கப்படும் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இலங்கை வங்கியின் பதில் தலைவராக ஆர்.சிவராமன் நியமிக்கப்பட்டுள்ளார். (ந-110)

## பிரதம நீதியரசர் ஷிரா...

பிரேரணை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளுக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்கு மாறு விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு உயர் நீதிமன்றம் உத்தரவுகளை பிறப்பிக்க முடியாத காரணத்தினால் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் விசாரணைகள் முடிவடையும் வரையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைகளை ஒத்திவைக்க முடியுமா என ஆராயுமாறு உயர் நீதிமன்றம் கோரியுள்ளது. (ந-11)

## ராஜீவ் கொலை சூத்...

தானில் சுதந்திரமாக உலவுகின்றனர். அவர்களைப் பற்றி வாக்கு மூலம் அளித்த அஜ்மல் கசாப்பை மத்திய அரசு அவசரமாக தூக்கிலிட்டுள்ளது.

இதற்கு முன் பல தாக்குதல்களை நடத்தி உள்ள லஸ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் பாகிஸ்தானில் இயங்கி வருகின்றனர். அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த மேற்கொண்ட முயற்சி என்ன?

எய்தவன் இருக்க அம்பை மட்டும் தூக்கில் போடுவதால் எதிர்காலத்தில் தாக்குதல்கள் நிகழாமல் தடுத்திட முடியுமா? குற்றச் செயலில் ஈடுபட்டவர்களை தண்டித்து விட்டு அத்தோடு வழக்கை முடித்து விடுவது சதிகாரர்களை தப்ப விடும் நடவடிக்கை.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சதித் திட்டம் தீட்டியவர்களாக இருக்கலாம் என்று நீதிபதி ஜெயின் ஆணையத்தால் சுட்டிக்காட்டப்பட்ட சந்திராசாமி, சுப்பிரமணியசாமி போன்றோரை விசாரிக்க மத்திய காங்கிரஸ் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் குற்றச் செயலில் தொடர்பற்றவர்களான முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்கு தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி குரல் கொடுக்கிறது.

தங்கள் தலைவரை சதித்திட்டம் தீட்டி கொன்றவர்கள் யார் என்பதை விசாரித்து நாட்டிற்கு தெரிவிக்க வேண்டும் என்று ஒரு காங்கிரஸ்காரர் கூட அக்கறையுடன் குரல் எழுப்பவில்லை.

சதிகாரர்கள் அதிகாரத்துடன் உலவி வருகின்றனர். இப்படி சதிகாரர்களை விட்டு குற்றச் செயலில் ஈடுபட்டதாக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டவர்களை தூக்கிலிட்டு கொல்வதால் தீவிரவாத நடவடிக்கைகளை தடுத்து விட முடியாது. மரண தண்டனை என்பது மனிதாபிமான மற்ற தண்டனை. இவ்வாறு அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-11)

## இலங்கை மீதான சர்வதேச...

ஆதிக்க நிலை என்பவற்றை வாய்ப்பாக்கி அவர்களை அச் சுறுத்தியும் ஆசை காட்டியும் மோசம் செய்து வருகிறது.

எமது மாவட்டத்தில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை, வட்டக்கச்சி விவசாயப் பண்ணை ஆகியவற்றை மூடி வைத்துள்ளார்கள்.

பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கக் கூடிய இத் தொழிற்சாலைகள் இன்னும் இயக்கப்படவில்லை ஆனால் இராணுவமயப்பட்ட ஆட்சேர்ப்புகளும், சி.எஸ்.டி. போன்ற துணை நிலை ஆட்சேர்ப்புகளையும் பலத்த உள்நோக்கம் கருதி செயற்படுத்தி வருவது கவலை தருவதும் கண்டிக்கத்தக்கதுமாகும்.

இளம் பெண்களை இலக்கு வைத்து இராணுவப் படைக்கு இணைத்து மிக மோசமான நீண்டகால இன அழிப்பு முயற்சியில் ஈடுபட்டுவருகிறது. கவர்ச்சிகர சம்பளங்கள், சலுகைகள், அச்சுறுத்தல்கள், தொந்தரவுகளை குறித்த இலக்குக் குடும்பங்கள் மீது படையினர் பிரயோகித்து வருகின்றார்கள்.

பாடசாலை பிள்ளைகளைக் கூட இணைக்கும் முயற்சிகள் நடந்துள்ளது. பள்ளி அதிபர்களிடமும் கிராம அலுவலர்களிடமும் ஆட்சேர்ப்புக்கு தேவையான ஆவணங்களை இராணுவமே நேரில் சென்று பெற்று வருகின்றது.

பெற்றோர்களுக்கு சிவில் அலுவலகங்களில் சாதாரண அரச உத்தியோகங்கள் எனக் குறிப்பிட்டு அவர்களை ஏமாற்றி மறைமுகமான பலவந்த ஆட்சேர்ப்பில் இராணுவம் ஈடுபட்டுவருகின்றது.

வர்த்தமானி அறிவித்தலோ, அரச தொழில் வழங்கும் நியமங்களோ பின்பற்றப்படவில்லை. இராணுவமே நேரடியாக வீடுகளுக்குச் சென்று இப் பலவந்த ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு வருகின்றது.

ஒரு சில இளம் பெண்கள் பருவ வயதின் அறியாமையாலும், வறுமையால் எழுந்த விரக்தியாலும் இவ்வாட்சேர்ப்பின் பின் செல்லும் நிர்ப்பந்தமும் காணப்படுகிறது.

சில சந்தர்ப்பவாத அரசு, கிராம மட்டப் பிரதிநிதிகளும் ஏழைப்பிள்ளைகளை இவ்வாறு இணைக்க ஊக்குவித்து தங்கள் மேலிடச் சலுகைகளை அனுபவித்து வருகின்றனர். எமது தமிழ் கலாசாரத்துக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் செயலாகவே இவ் ஆட்சேர்ப்பு பார்க்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடு சமூகத்தின் வேறுபட்ட பார்வையையும் தோற்றுவிக்கும் நீண்டகாலத்தில் கலப்பினத் திருமணங்கள் ஊக்குவிக்கப்படும் பேராபத்தும் அதன் பின்னே இருக்கிறது. என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.